
ஆகஸ்ட் -
செப்டம்பர்
1995

# திங்கள்

மாதாந்த தமிழ் சஞ்சிகை



## தீர்வு யோசனைகள்
## மக்கள் கலந்துரையாடலுக்கு !



அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் பற்றி ஐக்கிய தேசிய கட்சிப் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி உரையாடியபோது .....



ஸ்ரீ.ல.மு.கா. பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியபோது...

AUG. - SEP. 1995 SECOND ISSUE

இரண்டாவது மலர் ஆகஸ்ட் - செப்டம்பர் 1995

# திங்கள்

## மாதாந்த தமிழ் சஞ்சிகை

ஆசிரியர் பீட ஆலோசகர்கள்

திரு. ஆரிய ரூபசிங்க
(தகவல் பணிப்பாளர்)

திரு. வசந்த பிரிய ராமநாயக்க
(பிரதம ஆசிரியர் "தெசதிய")

ஆசிரியர் :
ஹில்மி முஹம்மத்

இணை ஆசிரியர் :
நூருல் அமீன் நஜ்முல் ஹுசைன்

உதவி ஆசிரியர்:
லலிதா பரதன்

வடிவமைப்பு:
ஸ்ரீஸ் கந்தராஜா

அட்டைப்படம்
அனுஹஸ் மஹவலகே

புகைப்படங்கள்
தகவல் திணைக்கள புகைப்படப்பிரிவு
கலீல் கண்டு
அந்தனி ஜீவா

கணனி அமைப்பு
கிறஸண்ட் பப்ளிகேஸன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்

வெளியீடு
அரசாங்க தகவல் திணைக்களம்
321, லக்ஷ்மன்ஸ் பணிமனை
காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 577016-17-18
பெக்ஸ் : 576956

GOVT. INFORMATION DEPT.

உள்ளே ..........

தீர்வு யோசனைகள் மக்கள் கலந்துரையாடலுக்கு ஜனாதிபதி 03

அதிகாரப்பரவலாக்கல் நாட்டின் ஐக்கியத்தையும் இனங்களுக்கிடையேயான சமத்துவத்தையும் ஏற்படுத்தலாம் - த. சித்தார்த்தன் 06

வாகன நெரிசல் தலைநகருக்கு ஒரு தலைவலி 07

தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன - மு. சிவசிதம்பரம் 10

வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்குத் தனியான பிராந்திய சபை - ரவூப் ஹக்கீம் 11

கலாசாரக் கலப்பினால் பண்பாடு அழிந்துவிடுமா ? 12

திங்கள் கவிதை : புதிய உலகம் வேண்டும் 14

அதிகாரப் பரவலாக்கல் 15

அச்சுறுத்தல்களை மீறி வளர்ச்சிகாணும் உல்லாசப் பயணத்துறை 21

பத்திரிகைச் சுதந்திரம் பாதுகாக்கப்படுமா 23

சிந்தனைமயமான சமய வாழ்க்கைக்கு இளைஞர்களை ஈடுபடுத்த வேண்டும் - டாக்டர் லோகநாதன் 24

தமிழ் மொழி அமுலாக்கல் 27

# திங்களில் மலரும்
# உங்கள் சஞ்சிகை

உங்கள் கைகளில் தவழும் திங்கள் சஞ்சிகை
அரசாங்க தகவல் திணைக்களத்தின் மாதாந்த வெளியீடாகும்

மக்களால் தெரிவு செய்யப்படும் ஒரு அரசாங்கம் என்ன கூறுகிறது எதைச் செய்கிறது என்பதை சரியாக முறையாகத் தெரிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டு.

மக்கள் அரசாங்கத்தைப்பற்றி எந்த வகையில் அறிந்து தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதையும் அரசாங்கத்திற்கு அறிய வைக்கும் பொறுப்பு மக்களுக்கு இருக்கின்றது.

மேலும் தமிழும் சிங்களத்தைப் போலவே இந்த நாட்டின் அரசகரும மொழியாகும். எனவே மக்கள் பற்றிய செய்தியை அரசாங்கத்துக்கும் அரசாங்கம் பற்றிய செய்தியை மக்களுக்கும் பரிமாறிக் கொள்ளும் ஒரு சாதனமாக இச்சஞ்சிகை விளங்கும்.

அத்துடன் இந்த நாட்டின் சிங்கள மொழி எழுத்தாளர்களுக்கு வாய்ப்பளிக்க தனது கருத்துக்களை எழுத்துக்களை வெளியிட பல்வேறு அரச வெளியீடுகள் இருக்கின்றன. ஆனால், தமிழ் மொழியில் தொடராக வெளிவரக்கூடிய ஒரு சஞ்சிகை இல்லை எனக் கூறப்படும் குறையை அரசாங்கத் தகவல் திணைக்களம் தீர்த்து வைக்க முன்வந்துள்ளது.

எனவே வெகுசனத்தொடர்புத் துறையினர், கலை, இலக்கிய எழுத்தாளர்கள் முதலியோருக்கு மட்டுமன்றி தமிழ் மொழியை தாய் மொழியாக கொண்டவர்களுக்கு இத்திங்கள் சஞ்சிகை களம் அமைக்கும் அதேவேளை தமிழ் எழுத்தாளர்களின் பங்களிப்பு எமக்கு கிடைக்கும் எனவும் நம்புகிறோம்.

பொதுஜன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தது முதல் இனங்களுக்கிடையேயான பரஸ்பர உறவுகளை வலுப்படுத்தும் பணிகள் விரிவுபடுத்தப்பட்டன. அதேபோல் தமிழ் மொழி அமுலாக்கல் பணியில் காணப்படும் சிக்கல்களை அகற்றும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு வருவதையும் அறிய முடிகிறது. இந்த வகையில் திங்கள் சஞ்சிகை பாரிய பணிகளை நிறைவு செய்ய திடசங்கற்பம் பூண்டுள்ளது.

# அரசின் தீர்வு யோசனைகள் மக்கள் கலந்துரையாடலுக்கு

## பிடிவாதமான செயற்பாடு இங்கு இல்லை - ஜனாதிபதி

**ஏ.பி.எம்.**

வடக்கு-கிழக்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசு முன் வைத்துள்ள ஆலோசனைகள் பற்றி பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளிப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகா குமாரணதுங்காவின் தலைமையில் அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொடர்பு சாதனவியலாளர்கள் கலந்து கொண்ட இந்த கலந்துரையாடலில் தொடர்புசாதனவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு ஜனாதிபதி அச்சமின்றி, சிரித்த முகத்துடன் பதிலளித்தார்.

இங்கே தொடர்பு சாதனவியலாளர் எழுப்பிய கேள்விகள் மற்றும் ஜனாதிபதி, அவர்களுக்கு வழங்கிய பதில்களிலிருந்து ஒரு பகுதியை கீழே தருகிறோம்.

**தொடர்புசாதனவியலாளரொருவர்:- யுத்தமொன்று நடந்து கொண்டிருக்கும்போது அரசாங்கம் இவ்வாறு அரசியல் தீர்வொன்றை முன் வைப்பது ஏன் ?**

**ஜனாதிபதி** : நான் அடிக்கடி தொடர்ந்து சொல்லியிருப்பது போல அரசாங்கம் யுத்தம் புரிவது தமிழ் மக்களுக்கெதிராக அல்ல. நாட்டின் சுயாதிபத்தியத்துக்கு அச்சுறுத்தலாகவுள்ள ஆயுதம் ஏந்திய எல்.ரீ.ரீ.ஈ. அமைப்புக்கு எதிராகவே யுத்தம். இந்த தீர்வு யோசனைகள் மூலம் தமிழ் மக்கள் உள்ளடங்கலாக ஏனைய சிறுபான்மை யினருக்கு மட்டுமல்லாது நாட்டின் பெரும்பான்மை மக்களுக்கும் நன்மை கிடைக்கிறது.



**கேள்வி : இந்த ஆலோசனைகள் செயற்படுத்தப்படுவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள் ?**

**ஜனாதிபதி** : அதிக காலம் எடுக்காது அதனை செய்து முடிக்க வேண்டும் என நான் பிரார்த்திக்கிறேன்.

**கேள்வி : இந்த ஆலோசனைகள் பற்றிப் பேசுவதற்காக அவை எல்.ரீ.ரீ.ஈ. அமைப்புக்கு அனுப்பப்படுமா ?**

**ஜனாதிபதி** : ஆலோசனைகளை ஆரம்பத்தில் நிராகரித்த, அரசாங்கத்துடன் யுத்தத்திலீடுபட்டிருக்கும் அமைப்பொன்றுக்கு அத்தகைய ஆலோசனைகளை அனுப்புமளவுக்கு எந்தவொரு அரசாங்கமும் முட்டாள்தனமாகாது.

**கேள்வி : அரசின் ஆலோசனைகளுக்கு பாராளுமன்றத்தில் ஆதரவு கிடைக்காவிட்டால் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை என்ன ?**

**ஜனாதிபதி** : அவ்விடயம் சம்பந்தமாக இச்சந்தர்ப்பத்தில் கதைப்பது நடைமுறைச் சாத்தியமானதல்ல. கடந்த சில தினங்கள் முழுவதும் பல அரசியல் கட்சிகள் என்னைச் சந்தித்தன. அவர்களில் யாருமே இந்த யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் இந்த யோசனைகளுக்கு தமது உடன்பாட்டைத் தெரிவித்தார்கள். சுதந்திரக்கட்சியும் அதற்கு ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளது. பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அதுபற்றி அறிக்கையொன்று வெளியிட்டார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், சந்திரசேகரனின் தலைமையிலான மலையக மக்கள் முன்னணியும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சி மாத்திரம் இது தொடர்பாக எதுவும் கூறவில்லை. அவர்கள் இதனை ஆழமாக ஆராய்ந்து பார்த்துவிட்டு அறிவிப்பதாக கூறியுள்ளார்கள். என்றாலும் ஐ.தே.க. தலைவர் ஏ.சி.எஸ். ஹமீட் எங்களுடைய எரிந்து கொண்டிருக்கும் பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமென்றால் இத்தகையதொரு தீர்வு அவசியம் என்று பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார். இந்தப் பின்னணியில் இந்த யோசனைகள் தொடர்பாக முழுமையான உடன்பாட்டுக்கு வர முடியுமென நான் நினைக்கிறேன்.

**கேள்வி : இந்த யோசனைகளுக்கு எல்.ரீ.ரீ.ஈ. தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உடன்பட்டால் ..?**

**ஜனாதிபதி :**– ஜனநாயக ஓட்டத்துக்குள் வந்து ஆயுதத்தை கீழே வைத்து யுத்தத்தை நிறுத்துவதற்கு பிரபாகரனுக்கு எந்தத்தடையுமில்லை. இந்த யோசனைகளை அவர் ஏற்றுக் கொள்வாரென்றால் அவர் எங்களோடு யுத்தம் செய்ய மாட்டார்.

**கேள்வி : வடக்கு - கிழக்கு அரசியல் தீர்வொன்றை காண்பதற்கு எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் ஆதரவு அவசியம் என நீங்கள் ஆரம்பத்தில் கூறியுள்ளீர்கள். இப்போது எல்.ரீ.ரீ.ஈ. இயத்தின் ஆதரவின்றி இதனை நீங்கள் நடைமுறைப் படுத்தப் போவது எப்படி ?**

**பதில் :** சமாதான தீர்வு யோசனைகள் பற்றி கதைப்பதற்கு கடந்த டிசம்பர் மாதம் எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்துக்கு அழைப்பு விடுத்தோம். எனினும் அது பற்றிக் கதைப்பதற்கான தேவை அவர்களுக்கு இருக்கவில்லை. ஆகையால் அவர்கள் இல்லாமலே இதனை நடைமுறைப்படுத்த நாங்கள் முயற்சிக்க வேண்டும். இவை எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்துக்காக முன்வைக்கப்பட்ட யோசனைகள் அல்ல. இவை தமிழ் மக்களுக்காக முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகள். நாம் 4-5 மாதங்களாக அவர்களோடு பேச்சுவார்த்தை நடாத்தினோம். எனினும் அரசாங்கத்தின் சமாதான தீர்வு யோசனைகளைப் பற்றி பேசுவதனை அவர்கள் நிராகரித்து விட்டார்கள்.

**கேள்வி : உத்தேச மாகாண சபையை கலைப்பதற்கு மத்திய அரசுக்கு அதிகாரமில்லை தானே? ஆனால் இந்தியாவில் என்றால் மாநில அரசை கலைப்பதற்கு மத்திய அரசுக்கு அதிகாரமுள்ளது.**

**பேராசிரியர் பீரிஸ் :** இங்கு நாம் இவை இரண்டுக்கும் இடையில் ஒரு சம நிலைக்கு வரவேண்டும். நல்ல நியாயமான காரணமொன்றில்லாமல் மாகாணசபையொன்றை மத்திய அரசாங்கத்துக்கு கலைக்க முடியுமென்றால் அங்கே உண்மையில் அதிகாரப்பரவலாக்கம் என்றொன்று நடந்தில்லை. நீங்கள் இந்திய முறையை உதாரணமாகக் குறிப்பிட்டதால் நான் இதனைச் சொல்ல வேண்டும். இந்தியாவின் மாநில அரசைக் கலைப்பதற்கு மத்திய அரசுக்குள்ள அதிகாரத்தை "சகாரியா" ஆணைக்குழு உட்பட இரு ஆணைக்குழுக்கள், கடுமையான விமர்சனத்துக்குட்படுத்தியுள்ளன. மாகாண சபையைக் கலைப்பதற்கு முழு அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கக் கூடாது.

இந்த செயற்பாட்டில் தெளிவான இரு நோக்கங்களை நாம் இலக்காகக் கொண்டுள்ளோம். அவை 1. நாட்டின் சுயாதிபத்தியம் (இறைமை) 2. குடியரசின் ஐக்கியத்தைக் காப்பது ஏதாவதொரு மாகாணசபை, இலங்கைக் குடியரசின் ஐக்கியத்துக்கும் சுயாதிபத்தியத்துக்கும் (இறைமை) எதிராக நடந்து கொள்ளும் தீவிரவாத சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட மாகாண சபையை கலைத்துவிடுவதற்கு மத்திய அரசுக்கு அதிகாரமளிக்கும் வகையிலான பிரமாணமொன்றை அரசியல் யாப்பில் சேர்ப்பதற்கு எதிர்பார்க்கிறோம்.

**கேள்வி : வடக்கில் யுத்தமொன்று நடக்கும் சந்தர்ப்பத்தில் இவ்வாறான தீர்வு திட்டத்தை முன்வைப்பது நடைமுறைச்சாத்தியமானதா ?**

**ஜனாதிபதி :** எமக்கு இன்றோ நாளையோ இதனை நடைமுறைப் படுத்த முடியாது. இன்றும் இவை யோசனைகள் மட்டுமே. இன்னமும் இவை சட்டமாக்கப்பட வில்லை. இது அரசியல் யாப்பாக மாறும்போது வடக்கின் நிலைமை மாற முடியும். இப்போதும் எல்.ரீ.ரீ.ஈ. இயக்கம் நடாத்தும் பயங்கரவாத நிர்வாகம் அங்குள்ள மக்களின் வெறுப்புக்குள்ளாகியுள்ளது. எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்துக்கெதிராக மக்களிடையில் எதிர்ப்பு வளர்ந்து வருகிறது.

**கேள்வி : எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தை தோற்கடிப்பதுதான் அரசின் நோக்கமா?**

**ஜனாதிபதி :** இல்லை எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தை தோற்கடிப்பது இராணுவமே. எமக்கு யுத்தத்தை தற்காலிகமாக வெற்றி கொள்ள முடியும். அதில் எவ்வித சந்தேகமுமில்லை. எனினும் யுத்தத்திற்கு ஏதுவாகிய காரணிகளுக்கு தீர்வு வழங்காவிடின் மீண்டும் நூற்றுக் கணக்கான பிரபாகரன்கள் உருவாகலாம். அரசாங்கத்தின் தீர்வுத்திட்டத்தின் மூலம் யுத்தத்துக்கு காரணமான பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப் படும்.

**தமிழ் அரசியல் கட்சிகள் இந்த யோசனைகளுக்கு தமது உடன்பாட்டைத் தெரிவித்தார்கள்.**

**கேள்வி : மாகாண எல்லைகளை மாற்றி அமைப்பது தொடர்பாக நீங்கள் பின்பற்றும் நடைமுறை என்ன ?**

**ஜனாதிபதி :** அது விஷேடமாக இதற்கு சம்பந்தப்பட்டவர்களோடு கலந்தாலோசித்து மேற்கொள்ளப்படும்.

**கேள்வி : அதனை இப்போதே செய்ய நினைத்திருக்கிறீர்களா ?**

**ஜனாதிபதி :** இந்த யோசனைகளின் வெவ்வேறு அம்சங்கள் பற்றிப் பேசுகின்ற போது, நிச்சயமாக அதுபற்றியும் எமக்கு பேச முடியும்.

**கேள்வி : மாகாண எல்லைகளை மாற்றியமைப்பது பாராளுமன்ற உபகுழுவொன்றின் உடன் பாட்டுடனா? அல்லது அரசாங்கத்தின் மூலமா?**

**ஜனாதிபதி :** அவை இரண்டின் மூலமும் தான்.

**ஐ.தே.க. தலைவர் ஏ.சி.எஸ். ஹமீட் எங்களுடைய எரிந்து கொண்டிருக்கும் பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமென்றால் இத்தகையதொரு தீர்வு அவசியம் என்று பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார்.**



**கேள்வி : தமிழ் மக்களின் ஆதரவை வென்றெடுப்பதற்கு முயற்சிக்கிறோம் என்று சொல்லும் அரசாங்கம் இவ்வாறு யாழ்ப்பாணத்தில் யுத்தம் செய்வது ஏன்?**

**ஜனாதிபதி:** எல்.ரீ.ரீ.ஈ. யுத்தம் செய்யும் போது எங்களுக்கு நித்திரை செய்ய முடியாது.

**கேள்வி : உத்தேச வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபை செயற்படுத்தப்படுமா ?**

**ஜனாதிபதி :** இப்போதைக்கு வடக்கில் எந்தவிதமான நிர்வாகத்தையும் ஏற்படுத்த முடியாது. ஆகையால் இடைக்கால நிர்வாக சபையொன்றை அமைப்பது தொடர்பாக நாம் பேசுவது கிழக்கு மாகாணத்துடன் மட்டுமே.

**கேள்வி : நிறுவனமயமான அரசியல் கட்சிகளுக்கு புறம்பாக சில சிங்கள கல்விமான்களும் மதகுருமாரும் இந்த யோசனைத்திட்டம் பத்திரிகைகளில் வெளியானதன் பின்னர் தெரிவித்துள்ள எதிர்ப்புகளை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்.?**

**ஜனாதிபதி :** அரசாங்கம் எதனை முன்வைத்தாலும் அரசாங்கத்துக்கு விரோதமானோர் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பார்கள். அவர்களுள் எவராவது எல்.ரீ.ரீ.ஈ. ஐ ஒழித்துக் கட்ட வேண்டும் என்று சொல்வதைத்தவிர வேறேதாவது மாற்றுத் தீர்வினை முன்வைத்திருக்கிறார்களா?

உண்மையாகச் சொல்வதாக இருந்தால், எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தை ஒழித்துக் கட்டுவது எப்படி என்று பேசுவதற்கு, அவர்களோடு நான் கலந்துரையாட முடிந்தால் அதுகூட நல்லது என்று தான் தோன்றுகிறது. அவ்வாறே, வெளிநாடுகளிலுள்ள அவர்களது பிள்ளைகளை இந்த யுத்தத்தில் பங்கு பற்றுவதற்கு இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுக்கவும் நான் விரும்புகிறேன்.

**கேள்வி : இத்தகையதொரு சிந்தனையை உங்களது தந்தையார் முன்வைத்த போது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தது போன்று உங்களது சிந்தனைக்கும் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தால் ஏற்படும் நிலைமை என்ன?**

**ஜனாதிபதி :** இது அரசாங்கத்தால் ஒரேயடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கூறும் பிடிவாதமான செயற்திட்டமன்று. இது சிங்கள பெரும்பான்மை மக்களின் நலன் களையும் கருத்திற்கொண்டு தயாரிக்கப் பட்ட செயற்திட்டமாகும்.

**கேள்வி : எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தின் தடைகளுக்கு மத்தியில் அரசின் தீர்வு யோசனைகளை வடக்கு பகுதி மக்களின் கைகளுக்கு கிடைக்கச் செய்வது எப்படி?**

**பதில் :** அதனை செய்யும் விதத்தை நாம் பின்னர் அறிவிக்கிறோம். எப்படியாயினும் தீர்வு யோசனைகளை அவர்களுக்கு வழங்குவோம்.

**கேள்வி தீர்வு யோசனைகளை அரசியல் யாப்பில் உள்ளடக்கும் காலகட்டத்தில் எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்துடன் அரசு நடாத்தும் யுத்தம் முடிந்து விடும் என்று அரசாங்கம் நம்புகிறதா?**

**பதில் :** எல்.ரீ.ரீ.ஈ. ஐவிட அதிகளவில் யுத்தரீதியான லாபத்தை அடைந்து கொள்ளலாம் என நாங்கள் நம்புகிறோம்.

**இது ஒரேயடியாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்று கூறும் பிடிவாதமான செயற்திட்ட மன்று.**

**கேள்வி : 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இராணுவத்தில் சேரவேண்டுமென்று சட்டமாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?**

**பதில் :** இல்லை. எனினும் இந்தப் பிரச்சினையை இராணுவ நடவடிக்கையால் மட்டும்தான் தீர்க்க முடியும் என்று கூறுபவர்களின் கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியேற்பட்டால், 18 வயதுக்கு மேற்பட்டோர் இராணுவ சேவையை கட்டாயமாக்க வேண்டி வரும். இதற்கு காரணம் இராணுவ வீரர்களின் எண்ணிக்கை போதாமையாகும்.

**கேள்வி : மக்கள் விடுதலை முன்னணி ஜே.வி.பி. உடனும் பேச்சுவார்த்தை நடாத்தினீர்களா ?**

**பதில் :** ஆம். அதிகாரப்பகிர்வுக்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. எனினும் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனநாயக முறையை முற்றாக ஒழிப்பதோடு இந்த யோசனைகளை செயற்படுத்துவது பற்றி பரிசீலிக்க வேண்டும் என்பதே அவர்களது கருத்தாகும்.

**கேள்வி : உங்கள் அரசு எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தை தடை செய்யுமா ?**

**பதில் :** நாங்கள் அதுபற்றி இன்னமும் சிந்திக்கவில்லை.

**கேள்வி : மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளை பெற அராசங்கத்துக்கு முடியா விட்டால், மக்கள் முன்சென்று மக்கள் ஆணையைப் பெற்றுக் கொள்வீர்களா ?**

**பதில் :** இது ஊகம் மட்டுமே. அந்த நேரத்தில் பார்ப்போம்.

**கேள்வி : இந்த யோசனைகள் எதிர் காலத்தில் மாற்றி அமைக்கப்படுமா?**

**பதில் :** ஆம் இவற்றை சட்ட பூர்வமானவையாக மாற்றுகையில் சில சில மாற்றங்கள் ஏற்படலாம். அவை அனைத்தையும் பகிரங்கப்படுத்தி விட்டுத்தான் மக்களின் தீர்ப்பைப் பெற்றுக்கொள்வோம்.

# அதிகாரப் பரவலாக்கல் நாட்டின் ஐக்கியத்தையும் இனங்களுக்கிடையான சமத்துவத்தையும் ஏற்படுத்தலாம்

த. சித்தார்த்தன்
புளொட் தலைவர்

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அரசியல் தீர்வே அமைய முடியும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்த காலம் தொட்டக்கம் கூறி வந்தது. குறிப்பாக ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அவர்கள் பாராளுமன்றத் தேர்தலின் போதும் ஜனாதிபதித் தேர்தலின் போதும் தனது பிரச்சார மேடைகளில், இனப் பிரச்சினை இந்த நாட்டின் பிரதான தேசியப் பிரச்சினைகளில் ஒன்று என்று பகிரங்கமாக ஏற்றுக் கொண்டதோடு தனது பதவிக் காலத்தில் வடகிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்த முன் முயற்சிகளை மேற்கொண்டிருந்ததையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.



த. சித்தார்த்தன்


அரசியல் தீர்வுத்திட்ட யோசனைகளை முன்வைத்ததன் மூலம் தனது கருத்துக்களுக்கு உறுதியான செயல் வடிவம் ஒன்றைக்கொடுத்துள்ளார். பல்லின, மத, மொழிப் பாரம்பரியங்களைக் கொண்டிருக்கும் இந்நாட்டில் அனைத்துப் பிரிவு மக்களும் சமத்துவமாக வாழவும், அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொண்டு அனுபவிக்கவும், தமது பிராந்தியத்தில் காணப்படும் வளங்களை பூரணமாகப் பயன்படுத்தி தமது பொருளாதாரத் துறையை மேம்படுத்தவும் போதிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற முற்போக்கான எண்ணம் ஜனாதிபதியின் தீர்வுத்திட்ட யோசனைகளில் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது. மிகவும் ஆழமான பரந்த அடிப்படையிலான அதிகாரப் பரவலாக்கலே நாட்டின் ஐக்கியத்தையும் இனங்களுக்கிடையிலான சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் தேசிய பொருளாதார வளர்ச்சியையும் உறுதிப்படுத்தும் எனும் தொலைநோக்கான கருத்தை ஜனாதிபதி செயற்படுத்த முயற்சிகள் மேற்கொள்வதை நாம் காண்கிறோம்.

முன்வைக்கப்பட்ட யோசனைகளில் முன்னேற்றமான பல அம்சங்கள் காணப்படுகின்றன. ஒற்றையாட்சி முறைக்குப் பதிலாக பிராந்தியங்களின் ஒன்றியம் எனும் இணைப்பாட்சியை ஒத்த ஆட்சி முறை அறிமுகப்படுத்தப் படுகிறது. இது சிறுபான்மை மக்கள் மத்தியில் நிலவும் அச்சத்தையும் சந்தேகங்களையும் படிப்படியாக போக்க உதவும் என நாம் நம்புகிறோம். இனப்பிரச்சினையின் அடிப்படைக் காரணங்களில் ஒன்றான திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு வழிவகுத்த காணிப்பயன்பாடுகள் சம்பந்தமான பழைய நடைமுறைகள் மாற்றப்பட்டு காணி சம்பந்தமான முழு அதிகாரங்களும் பிராந்திய சபைகளிடம் ஒப்படைக்கப்படவிருப்பது சிறப்பம்சமாகும். அடுத்ததாக பிராந்தியத் திற்குட்பட்ட சட்டம், ஒழுங்கு சம்பந்தமான கணிசமான அதிகாரங்கள் பிராந்திய சபையிடம் ஒப்படைக்கப்பட விருப்பது தமது பாதுகாப்பு குறித்து அச்சமும் கவலையும் விரக்தியும் கொண்டிருக்கும் சிறுபான்மைத் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டிலும் நம்பிக்கை தரக்கூடிய விடயமாகத் தெரிகிறது. இவ்வாறான பல விடயங்களில் முன்னேற்றகரமான அம்சங்களைக் காணக்கூடியதாக இருந்தாலும் கல்வி, நிதித்துறை, நீர்பாசனம் போன்ற பல பிரதான விடயங்களில் மத்திய அரசின் தலையீடு சம்பந்தமாக தெளிவான நிலைப் பாட்டை காணமுடியாது இருக்கிறது. குறிப்பாக இதுவரை உத்தியோகபூர்வமாக எமக்கு கிடைக்காத இந்த யோசனைத் திட்டங்கள் அரசியல் அமைப்புக்கான வரைவுகளாக மாற்றப்பட்ட பின்பே இதன் முழுமையான தாற்பரியத்தை எம்மால் இனம் காண முடியும்.

வடகிழக்கு நெருக்கடியான அரசியல் தீர்வில் நிராகரிக்க முடியாத பிரிவினராக உள்ள முஸ்லிம் மக்களுக்கான தீர்வுகள் சம்பந்தமான எந்த ஒரு அடிப்படையையும் காண முடியவில்லை. எல்லைகள் மீள நிர்ணயம் செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருக்கும் தீர்வுத்திட்ட யோசனை, அதற்கான அடிப்படைகளைக்கூட தொட்டுக்காட்ட வில்லை. இவ்வாறான சர்ச்சைக்குரிய

29ஆம் பக்கம் பார்க்க

# வாகன நெரிசல்.... தலைநகருக்கு ஒரு தலைவலி!



ஐயோ இன்றும் பெரியவர் தினவரவுப் புத்தகத்தில் சிவப்புக் கோடு கீறி விட்டார். இம்மாதத்தில் இது நான்காம் முறை, என்ன செய்வது எவ்வளவு முயற்சித்தாலும் நேரத்துக்கு வேலைக்கு வரமுடியாமல்தானே இருக்கின்றது. இன்றும் கூட டிரபிக் புளொக்கிற்கு மாட்டிக்கொண்டேன்.

காரியாலயங்களில் பணிபுரிவோர் மத்தியில் இப்படிப் பேசுவதனை அடிக்கடி எமக்கு கேட்க முடிகின்றது.

உரிய நேரத்துக்கு அலுவலகத்துக்கு வராததனால் நேரப்பதிவு இயந்திரத்தினால் தண்டிக்கப்படும் அரசாங்க, தனியார் நிறுவன ஊழியர்கள் உட்பட பொதுமக்கள் வாகன நெரிசலினால் எதிர்கொள்ளும் துன்பத்துக்கு அளவேயில்லை.

நாளுக்குநாள் அதிகரித்து வரும் சனத்தொகைக்கு மத்தியில் போக்குவரத்துப் பிரச்சினை ஒரு தலையாய பிரச்சினையாகவே அமைந்துள்ளது. இலங்கைக்கு மட்டுமன்றி மூன்றாமுலக நாடுகளும் இப்பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளன. ஏன் வளர்ச்சி கண்ட நாடுகளிலும் இப்பிரச்சினை இருக்கின்றன. ஆனால் அந்நாடுகள் ஆக்கபூர்வமான திட்டங்களைச் செயற்படுத்தி இப்பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றன.

ஏன் நமது அயல் நாடான இந்தியா இப்பிரச்சினைக்கு சிறப்பான முறையில் முகங்கொடுத்து வருகின்றது. இந்தியாவில் புகையிரதச்சேவை திறம்பட இயங்குகின்றது. அதேபோன்று பஸ் சேவையும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் தூர சேவை பஸ்கள் நன்றாக அமைந்திருப்பதனால் அனேகர் தூரப்பயணங்களுக்கு தமது சொந்த வாகனங்களைப் பாவிப்பது குறைவாகும்.



நமது நாட்டைப் பொறுத்தவரை போக்குவரத்து நாளுக்குநாள் பெரும் பிரச்சினையாகவே அமைந்துள்ளது. அரசாங்கம் பல ஆக்கபூர்வமான திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்துவதற்கு முற்பட்டுள்ள போதும் நாட்டின் நிதிப்பிரச்சினை இதற்குத்தடையாக அமைந்துள்ளது.

சில தினங்களுக்கு முன் பஸ்சொன்றிலிருந்து இறங்கிய இரு யுவதிகளின் கூற்று பிரயாணஞ் செய்வது எவ்வளவு கஷ்டமாக இருக்கின்றது என்பதற்கு சிறந்த உதாரணமாகும். தனியார் பஸ் வண்டியொன்றிலிருந்து இறங்குவதற்குப் பட்ட சிரமத்தை அவர்களிருவரும் இப்படிக் கூறினார்கள். "யாழ்ப்பாணத்தை புலிகளிடமிருந்து மீட்டெடுப்பதனை விடக் கஷ்டமானதாகவே பஸ்சிலிருந்து இறங்குவதிருக்கின்றது." உண்மையில் பஸ்சில் மக்கள் அவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

போக்குவரத்து நெரிசலுக்கும் போக்குவரத்து பிரச்சினைக்கும் காரணமென்ன என்று இனிப் பார்ப்போம். வாகனங்கள் நாளுக்கு நாள் அதிகரிப்பது; அதற்கேற்ற வகையில் நெடுஞ்சாலைகள் அமையாமை; திட்டமிட்ட முறையில் நெடுஞ்சாலைகள் அமைக்கப்படாமை இதற்கு காரணமாகும்.

1994-ம் ஆண்டு இலங்கை முழுவதிலும் 11,62,313 வாகனங்கள் பதியப்பட்டுள்ளன. இதில் 55%மான அளவு மோட்டார் சைக்கிள்களாகும். வாகன நெரிசலுடன் வாகன விபத்துக்களும் தொடர்புடையது. 1993-ல் இடம்பெற்ற 1,571 விபத்துக்களில் 1,682 பேர் மரணமானார்கள். 1994-ல் 1,574 விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இதனால் 1,724 பேர் கொல்லப் பட்டனர். இந்த விபத்துக்களில் அதிகம் கொழும்பு மாவட்டத்திலே இடம் பெற்றுள்ளன. 1883-ல் 122 பேரும் 1994ல் 117 பேரும் கொழும்பு மாவட்டத்தில் வாகன விபத்தினால் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 15 வருடத்துக்குள் கொழும்பு மாவட்டத்தில் ஐந்து மடங்கு வாகனங்கள் அதிகரித்துள்ள போதும் அதற்கேற்ற வகையில் நெடுஞ்சாலை கள் அபிவிருத்தி செய்யப்படவில்லை என கொழும்பு நகரின் வாகன நெரிசல் பற்றிக் கூறும் கொழும்பு போக்குவரத்து பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கமிலஸ் அபேகுணவர்தன கூறுகிறார். இலங்கையில் கொழும்பு நகரைக் கடந்து வேறு நகரங்களுக்குப் போகக் கூடிய பாதைகள் கொழும்பு நகருக்குள்ளேயே அமைந்திருக்கின்றது. உதாரணமாக கல்கிசையிலிருந்து கட்டுநாயக்காவுக்கு ஒருவர் போக வேண்டுமாயின் அவர் கொழும்பு நகரினூடாகவே செல்ல வேண்டும். வேறு நாடுகளில் இப்படியான சந்தர்ப்பங்களில் நகரின் எல்லையூடாகச் செல்லும் பாதைகள் அமைக்கப் பட்டுள்ளன. அப்போது தேவையற்ற விதத்தில் வாகனங்கள் நகருக்குட்பட வேண்டியதில்லை.

தமது அன்றாடத் தேவைகளுக்கு நகருக்குச் செல்வோர் தனிப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்துவது வசதிக்காகவேயாகும். இங்கு வசதிகளை வழங்கக் கூடிய ஆடம்பர அல்லது உயர் ஆடம்பர. குறிப்பிட்ட நேரத்தில் ஓடக்கூடிய போக்குவரத்து சேவைகள் இருக்குமாயின் கூடுதலான பணத்தைச் செலுத்தி இச்சேவையை பயன்படுத்த எவரும் பின்நிற்க மாட்டார்கள்.

தற்போது பிரதான நகரங்களுக் கிடையே நடைபெறும் குளிரூட்டிய இடையில் நிறுத்தப்படாத பஸ் சேவைகள் இந்த வகையில் ஓரளவு பயனையளித்துள்ளன என்று கூறலாம். கண்டியிலிருந்து கொழும்புக்கு தனது சொந்த வாகனத்தில் வரும் ஒருவருக்கு இந்த குளிரூட்டிய பஸ் சேவையை பயன்படுத்துவதனால் பலவித நன்மைகள் கிடைக்கின்றன. இங்கு பஸ் சேவைகளில் கூட கூடுதலான பயணிகளை ஏற்றுவதனால் முன்பிருந்த நம்பிக்கையை இழந்து வருகின்றனர். இதற்கு பொறுப்பானவர்கள் உரிய வரையறைகளை மீறிச் செயற்படா திருப்பதனை உறுதிசெய்ய வேண்டும்.

நாட்டின் பொதுப்போக்குவரத்து வசதிகளை முன்னேற்றுவதன் மூலம் தனியார் வாகனங்கள் பயன்படுத்தப் படுவதனை மட்டுப்படுத்தப்படலாம். பாடசாலை விடுமுறை காலத்தில் போக்குவரத்து நெரிசல் குறைகின்றது. தினமும் சேவையிலுள்ள வாகனங் களில் 25 வீதமானவை பாடசாலை மாணவர்களுக்கான பஸ் சேவையாகும். பொதுப்போக்குவரத்து சேவையை முன்னேற்றினால் இந்த தனிப்பட்ட வாகனங்கள் வீதிக்கு வருவதனைக் குறைக்கலாம் என போக்குவரத்து பொலிஸ் பிரிவு அத்தியட்சகர் கமிலஸ் அபேவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு பொருட்களை ஏற்றிச் செல்லும் லொறி மற்றும் கொள்கலன் களை ஏற்றிச் செல்லும் வாகனங்களை இரவு நேரத்துக்கு மட்டுப்படுத்த வேண்டும்.

**வெளியூர்களில் இருந்து தினமும் கொழும்புக்கு வரும் வாகனங்களின் எண்ணிக்கை**

| கொழும்பு மாநகரை எல்லைப்படுத்தும் பாலங்கள | வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| புது கலனிப்பாலம் | - 60,200 |
| விக்டோரியாப்பாலம் | - 4,500 |
| ஜப்பான் - இலங்கை நட்புறவுப் பாலம் | - 15,000 |
| தெஹிவளைப்பாலம் | - 44,000 |
| கிருளப்பனை | - 25,000 |
| வெல்லம்பிட்டிய பாலம் | - 12,000 |
| பொரல்லை - ராஜகிரிய வீதி | - 15,300 |

போக்குவரத்து விதிகளை மக்கள் கட்டாயமாக கடைப்பிடிப்பதற்கு வகை செய்வதன் மூலம் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க முடியும். நம் நாட்டில் அனேகர் போக்குவரத்து விதிகளை பேணி நடப்பது குறைவு. மேம்பாலங்கள் இருந்தாலும் பாதசாரிகளுக்காக மஞ்சள் அடையாளம் போடப்பட்ட ஒதுக்கைகளிருந்த போதும் அவற்றைக் கவனத்திலெடுக்காது மக்கள் வீதியில் ஒரு புறத்திலிருந்து மறுபுறத்திற்கு மாறுகின்றார்கள். வெளிநாடுகளில் இப்படி நடப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். இலங்கையிலும் இந்த விதிகள் கடுமையாக அமுலாக்கப்பட வேண்டும். தற்போதுள்ள சட்ட விதிகளை அமுல் படுத்துவதற்குப் போதிய ஆளணியினரில்லாமை தமக்குள்ள பிரதான தடை என பொலிஸ் அத்தியட்சகர் கூறுகிறார். வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித் தளவுக்கு அதிகாரிகள் அதிகரிக்கப்பட வில்லை. மற்றைய நாடுகளில் சுயமாக இயங்கும் கமரா காட்சித்திரை கம்பியூட்டர் இயந்திரங் களிருக்கின்றன. எமக்கு மட்டுப்படுத்தப்பட்ட வாகனங்கள் இருக்கின்றன என்றும் திரு அபேகுணவர்தன கூறுகிறார்.

வாகனங்களை பாதை ஓரமாக நிறுத்தி வைப்பதும் நெரிசலுக்கு காரணமாகும். மற்றைய நாடுகளில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு தனியான தரிப்பிட வசதிகள் உண்டு நகரில் பல இடங்களில் வாகனத் தரிப்பிடங்கள் இருப்பது அவசியமாகும்.

கொழும்பு உட்பட பிரதான நகரங்களில் இவ்விதம் வாகன நெரிசலைப் போக்குவதற்கு அவசியமான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். புறக்கோட்டை நகரை நவீனமயப்படுத்தி தற்போதுள்ள கடைகளை அகற்றி விரிவான திட்டம் ஒன்றைச் செயற்படுத்துவதற்கு போக்குரவரத்து அமைச்சு திட்டமிட்டுள்ளது புறக்கோட்டை பஸ் நிலையத்தைப் புனரமைத்து தற்போது புறக்கோட்டையின் மத்தியிலிருக்கும் கடைகளை அகற்றி அவற்றை பாதைக்கு மேல் கட்டடமமைத்துக் கொண்டு செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



***அலுவலகங்களை நோக்கிப் படையெடுப்பவர்கள் எவ்வளவு கஷ்டங்களுடன் பிரயாணம் செய்கிறார்கள் என்பதை அவதானிக்கலாம்***

இப்படி பல திட்டங்களை செயற்படுத்தி போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்படாவிட்டால் எதிர் காலத்தில் பல பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். கொழும்புக்கு வெளியூர்களிலிருந்து தினமும் வரும் வாகனங்களது புள்ளி விபரத்தை நீங்கள் பார்த்தால் இப்பிரச்சினையின் பாரதூரத்தை உணர்ந்து கொள்ளலாம்.

என்.எம்.



# தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன

**தீர்வு யோசனையை ஜனாதிபதி இதயசுத்தியுடன் முன்வைத்திருப்பதை நன்கு அவதானிக்க முடிகிறது.**

1994 பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பும் திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க துணிச்சலுடனும், நேர்மையுடனும் வெளியிட்ட கருத்துத்தான் தமிழ் மக்களுக்கு குறைபாடுகள் உண்டு. அது கட்டாயம் தீர்க்கப்பட வேண்டும், அந்த அடிப்படையில் தான் மீண்டும் இந்த நாட்டில் சமாதானமும், அமைதியும் நிலவ வழிவகுக்க முடியும் என்பதாகும்.

இது வழக்கமாக அரசியல் தலைவர்கள் தேர்தல் காலங்களில் அளிக்கும் வாக்குறுதிகளைப்போல் இல்லாமல், தான் அதிகாரத்துக்கு வந்தவுடன் போரை நிறுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற் கொண்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சைத் தொடங்கினார். துரதிஷ்டவசமாக அந்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடவாமல் போய்விட்டது. மீண்டும் ஒரு போர் தொடங்குவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.



**கூட்டணித்தலைவர் மு. சிவசிதம்பரம்**

ஆனால் குறைபாடுகள் தமிழ் மக்களுக்கு என்பதை ஏற்று இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதற்கு தனது யோசனைகளை ஜூலை மாதம் 31 ஆம் திகதி மக்கள் முன் ஜனாதிபதி சமர்ப்பித்தார். இந்த யோசனைகள் இதற்கு முன்பு எந்த அரசியல் தலைவர்களோ, நாட்டின் அதிபதியோ முன்வைக்கப்படாத மிகவும் முற்போக்கான பலவிடயங்களை உள்ளடக்கியுள்ளது. ஒரு சமஷ்டி ஆட்சிமுறை என்பதைக் குறிப்பிடா விட்டாலும், சமஷ்டி ஆட்சியின் பல கோட்பாடுகள் இந்த யோசனையில் அடங்கி இருப்பதை நாம் காண்கின்றோம்.

**பேட்டி :-**
**எம்.ஏ.எம். நிலாம்**

1972, 1978 அரசியல் திட்டங்களில் இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடு என்பதை மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த ஷரத்து இருப்பதால்தான் உண்மையான அதிகாரப்பரவலாக்கலை செய்ய முடியாத நிலை தோன்றியது. எனவே அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டுமானால் அந்த ஷரத்தை முற்றாக நீக்க வேண்டி இருந்தது. எத்தனையோ சக்திகள் அரசியல் தீர்வுக்கு எதிராக முடுக்கிவிடப்பட்ட போதும் ஜனாதிபதி நேர்மையாகவும், துணிச்சலுட னும் இந்த ஷரத்தை அகற்றி உண்மையான அதிகாரப் பரவலாக்கத்தைக் கொண்டுவர வழி வகுத்துள்ளார்.

அதே போன்று சட்டம் தயாரிக்கும் அதிகாரத்தை பாராளுமன்றம், வேறு சட்டவாக்க ஸ்தாபனத்துக்குக் கொடுக்கக் கூடாது என்று 78ஆம் அரசியல் சட்டத்தில் உள்ளது. அதையும் புதிய யோசனையில் அகற்றியுள்ளார். பிராந்திய சபைகளுக்கு மாற்றப்பட்ட விடயங்களில் சட்டமியற்றும் அதிகாரம் முழுதாக அந்தப் பிராந்திய சபைகளுக்கே வழங்கப்படுகின்றது.

பிராந்திய சபைகளின் நிருவாக உரித்து முழுமையாக பிராந்திய சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சருக்கும், மந்திரி சபைக்கும் கொடுக்கப்படுகிறது.

13வது அரசியல் திருத்தத்தில் மாகாண சபைகளுக்கு சில அதிகாரங்கள், மத்திய அரசுக்கு சில அதிகாரங்கள் இரண்டுக்கும் பொதுவான அதிகாரங்கள் என்று வரையறுக்கப்பட்டிருந்தது. இதில் இந்த பொதுவான அதிகாரங்களினால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டன. இங்கும் ஏற்பட்டன. இந்தியாவில் கூட இது ஏற்பட்டது. எனவேதான் அந்தப் பொது அதிகாரங்களை அகற்றி அதிலுள்ள அதிகாரங்கள் சகலதையும் பிராந்திய சபைகளுக்கு வழங்குவதென யோசனையில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.

இன்னுமொரு பிரதான அம்சம் ஜனாதிபதிக்கோ, ஆளுநருக்கோ பிராந்திய சபையை கலைக்கும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை. பிராந்திய சபையில் முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டுவரப்படுமிடத்து அது சபையில் ஏற்கப்பட்டால்தான் அவரை அகற்றலாம். எனவே முற்று முழுதாக ஜனநாயக அடிப்படையில் இயங்கும் பிராந்திய சபைகளாக இவைகள் இருக்க வேண்டுமென்றே யோசனைகள் எடுத்துக் கூறுகின்றது.

மேலும் பிராந்திய சபை ஒரு சட்டத்தை ஆக்குமிடத்து அதற்கு மறுப்புத் தெரிவிக்கும் உரிமை ஆளுநருக்கு கிடையாது. பிராந்திய சபையின் தலைவர் அதில் ஒப்பமிட்டவுடன் அது சட்டமாகிவிடும்.


### பாதுகாப்பு

வட.கிழக்கு மாகாணத்தில் வாழுகின்ற மக்களின் பாதுகாப்பு தொடர்பாக இந்த யோசனையில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. பிராந்திய பொலிஸ் படையொன்று அமையும். அதில் பிராந்திய பொலிஸ் மா அதிபர் ஒருவர் நியமிக்கப்படுவார். அவர் முதலமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றவராக இருக்க வேண்டும். பொலிஸ் தனது நடவடிக்கைகளுக்கு முதலமைச்சருக்குத் தான் பதில் கூற வேண்டும். மத்திய அரசுக்கல்ல. இதன்படி பிராந்திய மக்களின் பாதுகாப்பு முற்று முழுதாக பிராந்திய சபைக்கும், முதலமைச்சருக்கும் கொடுக்கப்படுகிறது.

29 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கு தனியான பிராந்திய சபை

**வடக்கு கிழக்கு பிரச்சினைக்கான தீர்வு அங்கு வாழும் மூவின மக்களினதும் அபிலாசைகளையும் நியாயமான அரசியல் எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்யும் வகையில் அமைய வேண்டும்.**



**சட்டத்தரணி ரவூப் ஹக்கீம்**
*ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர், பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர்.*

அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் ஒட்டுமொத்தமாக அரசியல் அதிகாரம் தமது கைகளை விட்டு நழுவிவிடக்கூடாது என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனவே தவிர, நாட்டைக் குட்டிச் சுவராக்கிக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினையை அந்தரங்க சுத்தமாக அணுகி, அதனைத் தீர்த்துவைக்க முனையவில்லை.

இதனால் நாட்டின் இனப் பிரச்சினை மேலும் மோசமடைந்து, இங்கு வாழும் இனங்களுக்கிடையிலான வேறுபாடுகள் துருவப்படுத்தப் படுவதைத் தவிர்க்க முடியாது போய் விட்டது.

கடந்த அரசாங்கம் நியமித்த இனப் பிரச்சினை சம்பந்தமான பாராளு மன்றத் தெரிவுக்குழுவும், இதர கட்சிகளின் ஆலோசனைகளையும் தீர்வுகளையும், ஆராய்வதில் வெறுமனே காலத்தைக் கடத்தியதே தவிர ஐ.தே.க. அரசாங்கம் ஒரு தீர்வுத்திட்டத்தை முன் வைக்காத படியால் தனது இலக்கை அடையத் தவறி விட்டது.

இந்நிலைமையில் பொதுஜன முன்னணி அரசாங்கம் நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் இத்தீர்வுத் திட்டத்தைத் துணிச்சலுடன் முன் வைத்துள்ளது.

ஒற்றையாட்சி முறையை மாற்றி யமைத்து மாநிலங்களின் ஒன்றியம் எனத் தற்போது அறிமுகப்படுத்தப் படும் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வுதான் நாட்டின் ஐக்கியத்தைப் பேணுவதற்குரிய சரியான மாற்று வழியாகும் என அரசாங்கம் கருதுகிறது.

இது வரை காலமும் ஒற்றையாட்சி முறையின் கீழ் வழங்கக்கூடிய அதிகபட்ச அதிகாரப் பரவலாக்கம் அல்லாத வேறெதையும் சிந்திக்கவும் சீர்தூக்கிப் பார்க்கவும் மறுத்து வந்த சிங்களத் தலைமைத்துவம், முதன் முறையாக இத்தகைய முடிவை எடுத்திருப்பது இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனையாகும்.

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கான தீர்வு அங்கு வாழும் மூவின மக்களினதும் அபிலாசைகளையும், நியாயமான அரசியல் எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்யும் வகையில் அமைய வேண்டும்.

வடக்கு கிழக்கில் எவ்வாறான அதிகார அலகுகள் அமைய வேண்டும் என்பது எல்லை மீள் நிர்ணயம் செய்வதன் மூலம் தீர்மானிக்கப்படும் என மட்டுமே இத்தீர்வுத் திட்டம் மேலெழுந்தவாரியாகக் கோடிட்டுக் காட்டியுள்ளது.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவத்தில் தங்களுக்கு நீதி, நியாயம் கிடைக்கப் போவதில்லை என்பதை கண்கூடாகக் கண்டிருக்கி றார்கள்.

அந்த அனுபவத்தின் வெளிப் பாடுதான் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றமும் வளர்ச்சியும் என்றால் மிகையல்ல.

வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளை உள்ளடக்கிய முஸ்லிம் பெரும்பான்மை பிராந்திய சபையொன்றை ஏற்படுத்து மாறு எமது கட்சி அரசாங்கத்தை வலியுறுத்தி வருகிறது.

ஏனெனில், வட-கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் அரசியல் தனித்துவ அடையாளமானது இலங்கையின் அதிகாரப் பங்கீடு தொடர்பாக பிறிதொரு பரிணாமம் இருப்பதை மிகத் துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது.

தமிழ் குழுக்கள் தமது அரசியல் அபிலாசைகளை அடைந்து கொள்வதற்கு முஸ்லிம்களின் முதுகில் ஏறி சவாரி செய்ய எத்தனிக்கவும் கூடாது.

யதார்த்தத்தைப் புறந் தள்ளிவிட்டு நாட்டின் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண விழைவது நடைமுறைச் சாத்தியம் அற்றது.

தீர்வுத் திட்டத்தின் வெற்றி, இந்தச் சிக்கலான பிரச்சினைக்கு சுமுகமான தீர்வைக் காண்பதிலேயே தங்கியுள்ளது.

# கலாசாரக் கலப்பினால் பண்பாடு அழிந்து விடுமா ?

-இப்னு ஹாமீம்

இஸ்லாமியப் பண்பாட்டுப் பிராந்தியங்கள் (Cultural Zone) பற்றி முன்பு குறிப்பிட்டிருந்தோம். இவற்றுக்கிடையே இழையோடும் பொதுமைப் பண்புகள் சமயத்தினால் பெறப்பட்டவை. தனித்தன்மைகள் சூழலில் உருவானவை. இப்பிராந்தியங்கள் அனைத்தையும் பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல. அது இலகுவான காரியமுமல்ல. இந்தியப் பண்பாட்டுப் பிராந்தியத்தின் ஒரு பிரிவாகவே நமது இலங்கை அமைவதால் இது பற்றிய சில குறிப்புக்களை முன் வைப்பதே இக்கட்டுரையின் நோக்கம். ஒரே சமயத்தைப் பின்பற்றும் மக்கள் தேசிய இனங்களையும் இனக் குழுக்களையும் இனங்காணப்படுவதற்கான காரணங்களை அவதானித்தால் இதில் மொழி முக்கிய இடத்தை வகிக்கிறது என்பதை உணரலாம்.



**கலாசாரத்தில் மொழியின் இடம்**

கலாசாரத்தின் ஆன்மீக அடித்தளத்துக்கு ஸ்திரம் அளிப்பவை மொழியும் மரபுகளுமேயாம். கலாசாரத்தை இனம் காட்டும் கண்ணாடியே மொழி. என்கிறார் அமெரிக்க மானுடவியலாளர் "க்லக்ஹொரன்" இலங்கை முஸ்லிம்களுக்கு மொழி முக்கியமில்லை. அவர்கள் எந்த மொழியையும் பேசிவிட்டுப் போகலாம். சமயம் தான் முக்கியம், என்று கூறுவோர் நம்மில் பலர் உளர். கலாசாரத்துக்கு ஊட்டத்தைக் கொடுப்பது சமயம் என்பதுண்மை. எனினும் ஓர் இனக்குழு அந்த ஊட்டத்தை வற்றிவிடாது பாதுகாக்கவும் வாழையடிவாழையாக ஸ்திரமான இருப்பை உறுதி செய்யவும் மொழி அவசியம்.

ஓர் இனக்குழுவின் கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கும் பெட்டகமும் மொழியேயாகும். சங்கிலித் தொடராக இந்தக் கலாசார நடத்தைகளை அடுத்தடுத்த பரம்பரைக்குக் கொடுக்கின்ற ஊடகமும் மொழியே. இதனாலேயே ஓர் இனத்தின் கலாசாரத்தை இனம் காணும் முதன்மைக் காரணியாக மொழியைக் குறிப்பிடுவர்.

ஒரு மொழியில் உள்ள சொல்லின் அசல் கருத்தை வேறொரு மொழியில் கொண்டு வருவது சிரமம். இதற்குக் காரணம் குறித்த சொல் பல்லாண்டு காலமாக ஒரு இனக்குழுவின் உணர்ச்சிகளின் ஊடகமாகப் பணியாற்றியுள்ளது. எனவே அச்சொல் வெறுமனே கருத்தை மாத்திரமன்றி உணர்ச்சியையும் தன்னுள் கொண்டுள்ளது. எனவே கலாசாரத்துக்கும் மொழிக்கும் உள்ள தொடர்பு மிக அழுத்தமானது.

எமது மொழியை மற்ற மொழிகளின் தரத்துக்கு உயர்த்துவதனால் எமது கலாசார தனித்துவத்தைப் பாதுகாக்கலாம். ஏனெனில் பூரண வளர்ச்சி பெற்ற மொழி ஒன்றினை உடையவர்களின் கலாசாரமும் அவ்வாறே உறுதியாயிருக்கும்.

இங்கு மொழியென்று குறிப்பிடப் பட்டது ஓர் இனக் குழுவின் தாய் மொழியையேயன்றி அக்குழுவைச் சேர்ந்த தனிநபர்கள் வெளியால் பெற்றுக் கொள்ளும் வேற்று மொழியல்ல. ஒரு சிங்கள இனத்தவர் ஆங்கிலம் படிக்கலாம் இதனால் அவர் ஆங்கிலேயன் ஆகி விடுவதில்லை. மொழிக்கும் கலாசாரத்துக்குமிடையேயுள்ள பிடிப்பை இதிலிருந்து நாம் உணரலாம்.

**கலாசாரக் கலப்பினால் அழிவேற்படுமா ?**

கலாசாரக்கலப்புக்கு பல்வேறு காரணிகள் உந்து சக்திகளாக விளங்குகின்றன. புதிய கருவிகளின் உபயோகம் காரணமாக கலாசார நடத்தையில் மாற்றம் ஏற்படுவது நாம் அன்றாடம் காணக் கூடிய யதார்த்தம். இது தவிர்க்க முடியாதது. இதன்படி இஸ்லாமிய பண்பாட்டுக் கோலங்களில் நாடு ரீதியாகவும் காலரீதியாகவும் மாற்றங்கள் விளைந்துள்ளன. இதனால் கலாசாரம் அழிவுறும் என்று அஞ்சுவோரும் உளர். சவூதி அரேபியாவுக்கு முதன் முதல் டெலிபோன் அறிமுகப்படுத்தப்பட்டபோது அதனை மன்னர் எதிர்த்ததாகவும் முதலாவது டெலிபோன் அழைப்பை "பிஸ்மி" எனும் மூல மந்திரத்துடன் தொடங்கி "ஸலாம்" எனும் முகமன் கூறிய போதே மன்னருக்கு திருப்தி ஏற்பட்டதாகவும் ஒரு சம்பவக் குறிப்புண்டு. சமயத்திலேயே

"புதுமைகள்" கொண்டுவருவதை எதிர்க்கின்ற போக்கை சவூதி ஒரு கோட்பாடாக ஏற்றிருந்ததனால் புதிய கருவி பாவனைக்கு வருவதையும் ஏற்கத் தயங்கியிருக்கலாம்.

கலாசாரத்தின் ஆன்மீக அடித்தளம் சிதைவதனாலேயே அதற்கு ஆபத்து ஏற்படுகின்றது. அவ்வாறன்றி பௌதீக மேம்பாடுகளில் ஏற்படும் மாற்றங்களால் பண்பாட்டுக்குப் பாதிப்பு ஏற்படுவதில்லை. இந்த மாற்றங்கள் கூட வெறுமனே பிரதி பண்ணுவதாக அன்றி ஆன்மீக அடித்தளத்தின் தேவையோடு ஒட்டியதாக கலாசார விழுமியங்களுக்கு ஏற்புடைத்தாக அமையுமாயின் பாதகமான விளைவு ஏற்படாது மாறாக கலாசார உறுதி ஏற்படும்.

சிங்களக் கலாசாரம் பற்றி ஆய்வு நடத்திய பிரபல அறிஞர் மார்ட்டின் விக்ரமசிங்க சில பயனுள்ள கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

கலப்பற்ற கலாசாரம் ஒன்றை உலகில் எங்கும் காண முடியாது. இரண்டு இன-மத மக்கள் மணமுடிப்பதாலும் கலாசாரம் கலப்புறுகிறது. கலாசாரம் கலப்படைவதால் அது புதுச் சக்தி பெறுவதாக மானுடவியல் ஆய்வாளர்கள் கூறுவர். ஆங்கிலேயர் உலகளாவ நாகரிகமடைந்த மக்களிடமிருந்து மட்டுமன்றி பழங்குடி மக்களிடமிருந்தும் பலவற்றைப் பெற்றனர். கிரேக்கம், சீனம், ஜப்பான், இந்தியா, மெக்சிகோ போன்ற நாடுகளிலிருந்து அவர்கள் கலாசார நடத்தைகளைப் பெற்றனர். ஆனால் அவற்றுக்கு அடிமையாகவில்லை. தமது சுய முயற்சியால் அவற்றுக்கு புது வடிவம் கொடுத்து தமது கலாசாரத்துக்கு ஏற்ற விதத்தில் மாற்றியமைத்துக் கொண்டனர்.

(சிங்களக் கலாசாரமும் மானிடவியலும் "பக். 68-69")

இஸ்லாமியப் பண்பாடு பற்றிய ஆய்விலும் மேற்காட்டிய கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்படத்தக்கவை. அரசியல்,. வர்த்தகம், புதிதாகத் தழுவும் சமயம், புதிய கருவிகள் கண்டுபிடிப்பு, புவியியல் சூழல், இப்படி பல காரணிகளால் கலாசாரம் கலப்படைகிறது.

15ஆம் நூற்றாண்டு முதல் மேலைநாட்டு காலனித்துவ ஆதிக்கத்தின் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளைக் கைப்பற்றியதனால் இக்குடியேற்ற நாடுகளின் கலாசாரங்கள் ஆட்டம் கண்டன. இந்நாடுகளில் நிலப் பிரபுக்களான "உயர் குடிமக்கள்" மேலைக் கலாசாரத்தைக் "கடன் வாங்கினர்" இதனால் கறுப்புத்தோல் வெள்ளையர்களின் உப கலாசாரம் என்றும் ஒரு காலத்தில் காணப்பட்டது. இன, மொழி பேதமின்றி இந்த உயர் குடிமக்கள் கலாசார அழிவுக்கு குழிவெட்டியபோதும், மத்திய வர்க்கத்தினர் மத்தியிலும் கிராமப்புற மக்கள் மத்தியிலும் சக்தி பெற்றிருந்த தேசிய மொழிகளும் மரபுகளுமே தேசிய கலாசாரங்கள் அழிவுறாமல் காத்தன. இது இலங்கைக்கும் பொருத்தும்.

அடிமைப் புத்தியுடன் பிற கலாசாரங்களைக் கடன் எடுத்து பிரதி பண்ணும் கைங்கரியத்தையே உயர் குடிமக்கள் செய்தனர். பிற கலாசார நடத்தைகளை தமது கலாசாரத்துக்கேற்ப புனர் நிர்மாணித்து புத்தி பூர்வமாகச் சேர்த்துக் கொள்வது ஆரோக்கியமான விளைவையே தரும்.

"கலாசாரம் பிறப்பால் வருவதல்ல சூழலால் பெற்றுக் கொள்ளப்படுவது" என்பது பொதுவான வரைவிலக்கணம். சூழல் என்பது மாறக் கூடியது. எனவே கலாசாரமும் மாறக் கூடியவையே. இன்று ஒவ்வோர் இனமும் தமது "சொந்த கலாசாரக் கூறுகள்" என்று கூறிப் பெருமிதம் கொள்ளும் பல நடத்தைகள் நூற்றாண்டுகளுக்கு முன் வேறோர் இனத்திடமிருந்து கடன் பெற்றதாக இருக்கலாம். பல்லாண்டுகள் வழக்கில் வரும்போது அவற்றுக்கு சொந்தம் கூறும் கருத்துணர்வு உருவாகிறது.

கலாசாரம் கட்டுப்பட்ட குட்டையல்ல. அங்கும் இங்கும் கொண்டும், கொடுத்தும், புறந்தள்ளியும், புதிதாய்ச் சேர்த்தும் சலனப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. இந்த அறிவியல் எண்ணக் கருவின் யதார்த்தத்தை யாரும் மறுக்க முடியாது.

பண்பாட்டுக் கோலங்களாக தோற்றம் காட்டும் உணவு, உடை, வாசஸ் தலங்கள், பழக்க வழக்கங்கள், மரபுகள், கலை, இலக்கிய வெளிப்பாடுகள் அனைத்துமே எல்லா நாடுகளிலும் பிற பண்பாட்டுக் கலப்பினாலேயே வளர்ந்து முன் செல்கின்றன. உலகளாவிய இஸ்லாமியப் பண்பாட்டுப் பிராந்தியங்களுக்கும் இவ்வுண்மை பொருந்தும்.











# புதிய உலகம் வேண்டும்







# அதிகாரப் பரவலாக்கல்



**அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாக அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை இங்கு தருகிறோம் இது பற்றிய உங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படும்.**

இம் முன்மொழிவுகள், பின்வரும் நெறிகளை ஆதாரமாகக் கொண்டு ஐக்கிய, இறைமை கொண்ட ஓர் இலங்கைக் குடியரசின் வரையறைக்குள் பல்மொழிபேசும் மக்கள் வாழும் சமுதாயத்தின் அரசியலமைப்பு அடிப்படையினை மீள் வரையறை செய்தலை நோக்கமாகக் கொண்டுள்ளன :

(அ) சகல சமூகங்களும் பாதுகாப்புடனும், பந்தோபஸ்துடனும் வாழக்கூடியதும், அவைகளின் கௌரவத்தினை மதிக்கக்கூடியதும், சமமாக மதிக்கப்படுவதையும் பொது வாழ்வில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முறையாக விளங்கக் கூடியதுமான இலங்கை பற்றிய தொலை நோக்கினை முன்னேற்றுவித்தல்.

(ஆ) சகல சமூகங்களினதும் தனித்துவத்தைப் பாதுகாத்தலும், அந்தத் தனித்துவத்தை மேம்படுத்துவதற்கான சூழ்நிலைகளை உருவாக்குதலும், இதில் அவர்களது சொந்தக் கலாச்சாரத்தைத் துய்ப்பதற்கும், தமது சொந்த மதத்தில் பற்றுறுதி கொள்வதற்கும், வழிபடுவதற்கும், தமது சொந்த மொழியைப் பேணி வளர்ப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான உரிமையும், தாம் விரும்பிய தேசிய மொழியில் அரசுடன் அலுவல்களைக் கையாளுவதற்கான வாய்ப்பினையும் உறுதி செய்தல்,

(இ) அனைத்து ஆட்களும் எவ்வித ஓரங்காட்டலும் இன்றி, சட்டத்தின்முன் சமமாக தமது மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் பூரணமாகவும், வினைத்திறனுடனும் பிரயோகிப்பதை உறுதிப்படுத்தல்,

(ஈ) சிங்கள மொழியையும், தமிழ் மொழியையும் அரசகரும மொழிகளாக அங்கீகரித்தலும் ஆங்கில மொழியை தொடர்பு மொழியாக அங்கீகரித்தலும்.

(உ) நாணயத்தன்மை, தெளிவுபாடு அத்துடன் உள்முகவாரியாக ஒருமுகப்படுத்தப்பட்ட மற்றும் ஒன்றித்த பெறுமதி முறைமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதும், வினைத்திறமையான அமுலாக்கத்தை இயலச் செய்யக்கூடியதும், மத்திய பிராந்திய பிணக்குகளை நீதியாகத் தீர்த்து வைப்பதற்கான கட்டமைப்புக்களை உள்ளடக்குவதுமான பிராந்தியங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கான வினைத்திறன்மிக்க அரசியலமைப்புக் கட்டுக்கோப்பு ஒன்றினை ஏற்பாடு செய்தல்,

(ஊ) தேசிய அல்லது மாகாண அல்லது உள்ளூர் மட்டம் எதுவாக இருந்தாலும், தேசிய வாழ்வில் சகல சமூகங்களும் முழுமையாகப் பங்குபற்றி, அதன் மூலம் பிராந்தியங்களும் அவற்றில் வாழும் சமுதாயத்தினரும் நிலையான பல்மொழிபேசும் சனநாயக முறைமையொன்றின் ஆக்கபூர்வ பங்காளிகளாக விளங்குவதை உறுதிப்படுத்தல்,

# மத்திய அரசுக்கான அதிகாரங்கள்

01. பாதுகாப்பு, தேசியப்பாதுகாப்பு, தேசிய பொலிஸ், பாதுகாப்புப்படைகள்.
02. குடிவரவு, குடியகல்வு, பிரஜாவுரிமை
03. வெளிநாட்டு அலுவல்கள்
04. தேசிய குடிசன மதிப்பீட்டு புள்ளி விபரங்கள்
05. தேசிய திட்டமிடுதல்
06. நாணயம், வெளிநாட்டு செலாவணி, சர்வதேச பொருளாதார உறவுகள், பணக்கொள்கை.
07. இலங்கை அரசாங்கத்தின் பகிரங்க கடன்
08. இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்கள்
09. வங்கித் தொழில் நிறுவனங்களையும், ஏனைய நிதி நிறுவனங்களையும் ஒழுங்குபடுத்தல்.
10. காப்புறுதி
11. பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை, எதிர்காலச்சந்தைகள்
12. இலங்கை அரசாங்கத்தின் கணக்காய்வு
13. தனியாட்களினதும், கம்பெனிகளினதும், கூட்டுத்தாபனங்களினதும் வருமானம், மூலதனம், செல்வம் ஆகியன மீதான வரிகள்.
14. இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் தீர்வைகள் உட்பட, சுங்கத்தீர்வைகள், மற்றும் (பிராந்தியங்களுக்குப் பரவலாக்கப்படக்கூடிய வாறான அத்தகைய உற்பத்தித் தீர்வைகள் நீங்கலாக) உற்பத்தித் தீர்வைகள்
15. (பிராந்தியங்களுக்குப் பரவலாக்கப்பட்ட அத்தகைய வரிகளும் தீர்வைகளும் நீங்கலாக) மொத்த விற்பனை வரவு வரிகளும் முத்திரைத்தீர்வைகளும், பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகளும்,
16. இலங்கை அரசாங்கத்தினால் அல்லது திரட்டு நிதியத்திலிருந்து கொடுபடற்பாலனவான ஓய்வூதியங்கள்.
17. அணுசக்தி
18. தேசிய மின்வலுப் பராமரிப்பும், முகாமைத்துவமும்
19. கனிப்பொருட்களும், சுரங்கங்களும் (எண்ணெய் கிணறுகள், கனிப்பொருள் மூலவளங்கள், பெற்றோலியம், மற்றும் பெற்றோலிய உற்பத்திப்பொருட்களை ஒழுங்குப்படுத்தலும் அபிவிருத்தி செய்தலும்)
20. தேசிய ஆறுகள்.
21. விமான நிலையங்கள், துறைமுகங்கள், சர்வதேச போக்குவரத்துடனான துறைமேடைகள்.
22. பிராந்தியங்களுக்கிடையிலான போக்குவரத்தும், புகையிரத சேவைகளும்.
23. சிவில் வான் போக்குவரத்து
24. பிராந்தியங்களுக்கிடையிலான பெருந்தெருக்கள்.
25. கப்பற்றொழில் மற்றும் கப்பற்போக்குவரத்து, வரலாற்று நீர்ப்பரப்புகள் மற்றும் ஆள்புல நீர்ப்பரப்புகள் (புறநீங்கலான பொருளாதார வலயம் மற்றும் கண்டமேடு)
26. (உள்ளூரதிகார சபைகளுக்கான தேர்தல்கள் தவிர்ந்த) தேர்தல்கள்.
27. தபால், தொலைத்தொடர்புகள்.
28. தேசிய பகிரங்க சேவை, தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு.
29. தேசிய சுகாதார நிர்வாகம் (ஏலவேயுள்ள விசேட நோக்க வைத்தியசாலைகளும், தேசிய பல்கலைக் கழகங்களுடன் இணைந்த போதனா வைத்தியசாலைகளும், சுகாதாரம் சம்பந்தமான பயிற்சி, கல்வி, ஆராய்ச்சி, தேசிய சுகாதார தராதரங்களை அபிவிருத்தி செய்தல், விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் அனைத்தை யும் நிர்வகித்தல் உட்பட)
30. கிருமிநாசினிகள் மருந்துகள் போதைப்பொருட்கள்.
31. நீதி நிருவாகம்
32. தேசிய பல்கலைக்கழகங்கள்.
33. உயர்தொழில், சுயபுரிதொழில் பயிற்சி சம்பந்தமாகத் தேசிய தராதரங்கள்.
34. கமத்தொழில் விடயப்பரப்பில் ஆராய்ச்சி, அபிவிருத்தி, பயிற்சி தொடர்பிலான தேசிய தராதரங்கள்.
35. பிராந்தியங்களுக்கிடையிலான நீர்ப்பாசனத்திட்டங்கள்.
36. ஆண்டில் நீர்ப்பரப்புக்கு அப்பால் மீன் பிடித்தல்.
37. கல்வித்துறையில் மத்திய கொள்கை ஆராய்ச்சி நிறுவனங்களின் முகாமைத்துவம், உதாரணம் : தேசிய கல்வி நிறுவகம், தேசிய பாடசாலைகளின் முகாமைத்துவமும், மேற்பார்வையும், தேசிய பகிரங்க சான்றிதழ் வழங்கும் பரீட்சைகளை நடாத்தல், பயிற்சி பாடவிதானம், ஆசிரியர் தகைமைகளுக்கு ஆகக்குறைந்த தராதரங்களை விதித்தல்.
38. மகவேற்வு
39. தேசிய கைத்தொழில் ஆராய்ச்சியும், பயிற்சியும்
40. தர நியமனங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல்.
41. வெளிநாட்டு வியாபாரம், மாகாணங்களுக்கிடையிலான வியாபாரமும் வர்த்தகமும்.

## 1. அதிகாரப் பரவலாக்கல் அமைப்பு முறை

### 1.1 பரவலாக்கல் கூறு

அரசியலமைப்புக்கான புதியதோர் அட்டவணை மூலம் இனங்காணப்படும் ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு பிராந்தியசபை தாபிக்கப்படும். பிராந்தியங்களுள் ஒன்று தற்போதுள்ள வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஏலவேயுள்ள எல்லைகளை மீள எல்லை குறிப்பதன்மூலம் அமைக்கப்படும்போது சிங்களவர், தமிழர், முஸ்லிம்களின் அக்கறைகள் பற்றி இணக்கம் காணும் நோக்குடனும் முழுமையான கலந்தாராய்வு இடம்பெறும்.

### 1.2 பிராந்திய சபைகள்

ஒரு பிராந்திய சபையானது சட்டத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். ஒரு பிராந்திய சபை, முன்னதாகவே கலைக்கப்பட்டாலொழிய, ஐந்தாண்டுக் காலப்பகுதிக்குத் தொடர்ந்திருக்கும், ஒவ்வொரு சபைக்கும் சபாநாயகர் ஒருவரும் பிரதிச்சபாநாயகர் ஒருவரும் இருப்பர்.

#### 1.2.1 பிராந்தியத்தின் சட்டவாக்கற் தத்துவம்

பிராந்திய சபைக்கு உரித்தாக்கப்பட்டதாக இருக்கும். பிராந்திய நிரலில் தரப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் ஒவ்வொரு பிராந்தியமும் அப்பிராந்தியத்துக்கு ஏற்புடைத்தான சட்டங்களை ஆக்கலாம். பிராந்திய சபை ஒதுக்கிய நிரலின்மீது எவ்வித நியாயாதிக்கத்தையும் கொண்டிருக்க மாட்டாது.

### 1.3 ஆளுநர்

பிராந்தியசபையொன்று எந்தப் பிராந்தியத்துக்கெனத் தாபிக்கப்பட்டதோ அந்தப்பிராந்தியம் ஒவ்வொன்றுக்கும் ஆளுநர் ஒருவர் இருத்தல் வேண்டும். இவர் பிராந்தியத்துக்கான பிரதான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவார்.



**1.3.1 ஆளுநர்**

(அ) பதவியிலிருந்து விலகியதன்மீது;

(ஆ) பிராந்திய சபையின் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மையினர் நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றை நிறைவேற்றுவதன்மீது;

(இ) சனாதிபதியால் அகற்றப் படுவதன் மீது, தமது பதவியைத் துறந்தவராவார்.

1.3.2 ஆளுநர், முதலமைச்சரின் ஆலோசனையின்மீது பிராந்திய சபையைக் கூட்டலாம், கலைக்கலாம் அத்துடன் ஒத்திவைக்கலாம்.

**1.4 முதலமைச்சரும் அமைச்சரவையும்**

ஆளுநர், பிராந்திய சபையில் பெரும்பான்மையினரின் ஆதரவைப்பெற்ற ஆளைப் பிராந்திய நிருவாகத்தை அமைக்குமாறு கேட்டுக்கொள்ளுவார்.

1.4.1 முதலமைச்சர் பிராந்திய சபையின் நம்பிக்கையை அனுபவிக்கும் காலம் வரைக்கும் பதவியிலிருந்து அகற்றப்பட முடியாது.

1.4.2 பிராந்தியத்திலுள்ள நிறைவேற்றுத் தத்துவம், முதலமைச்சரின் ஆலோசனையின்மீது ஆளுநரால் நியமிக்கப்படும் அமைச்சவைக்கு உரித்தாக்கப்பட்டிருக்கும். அமைச்சரவையினரும் முதலமைச்சரும் பிராந்திய சபைக்குக்கூட்டாகப் பொறுப்புடையவர்களாக இருப்பர்.

**1.5 தலைநகர ஆள்பலம்**

கொழும்பு மற்றும் சிறீ ஜயவர்த்தனபுர-கோட்டே ஆகிய நகரங்களைக்கொண்டுள்ள ஆள்புலம் மேற்குப் பிராந்தியத்துக் கென அமைக்கப்படும் பிராந்திய சபையின் நியாயாதிக்கத்திலிருந்து விலக்கி விடப்பட்டதாக இருக்கும். இவை மத்திய அரசு பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய முறையில் மத்திய அரசினால் நேரடியாக நிருவகிக்கப்படும்.

# பிராந்திய அரசுக்கான அதிகாரங்கள்

01. சுகாதாரமும், சுதேச வைத்தியமும்
02. தேசிய பாடசாலைகள், தேசிய பல்கலைக்கழகங்கள் அத்துடன் ஆசிரியர் பயிற்சிக்கும், பரீட்சைக்கும் பாடவிதானத்திற்கும், தகைமைகளுக்கும் ஆன ஆகக்குறைந்த தராதரங்களை அமைத்தல் ஆகியன நீங்கலாக கல்வியும், கல்விச்சேவைகளும்.
03. கமத்தொழிலும், கமநலச்சேவைகளும்
04. பிராந்தியத்தினுள் நீர்ப்பாசனம்
05. விலங்கு வேளாண்மை
06. கடற்றொழில்
07. ஒரு பிராந்தியத்தினுள் வனவியல், சூழல் பாதுகாப்பு
08. கைத்தொழில்களும், கைத்தொழில் அபிவிருத்தியும்
09. சக்தி
10. போக்குவரத்து
11. சிறிய துறைமேடைகளும், துறைமுகங்களும்
12. வீடமைப்பு, நிருமாணம்
14. நகர, திட்டமிடல்
15. கிராமிய அபிவிருத்தி
16. உள்ளூராட்சி
17. கூட்டுறவுகள்
18. பிராந்தியத்தினுள் உணவு விநியோகமும், பகிர்ந்தளிப்பும்
19. உல்லாசப் பிரயாணத்தை மேம்படுத்தல்
20. பகிரங்க அரங்காட்டல்கள் உட்பட, பிராந்தியத்தினுள் கலாச்சார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல்.
21. தொலைக்காட்சி உட்பட, ஒலிபரப்பும் செய்தித் தொடர்புச் சாதனமும்
22. நிவாரணம், புனர்வாழ்வு புனரமைப்பு
23. சமூகப்பாதுகாப்பு
24. அரச காணியும், அதன் பராதீனமும், அல்லது கையுதிர்ப்பும் (ஒதுக்கப்பட்ட ஒரு விடயப்பொருள் தொடர்பில் மத்திய அரசின் நோக்கங்களுக்குத் தேவைப்படும் ஒரு, பிராந்தியத்திற்குட்பட்ட அரச காணி, இயைபான பிராந்திய சபையின் கலந்தாலோசனையுடனும், சட்டத்தினால் தாபிக்கப்படக்கூடிய அத்தகைய நடவடிக்கை முறைகளுக்கு இணங்கவும் மத்திய அரசினால் பயன்படுத்தப் படலாம்)
25. பிராந்திய பொலிஸ், சட்டம், ஒழுங்கமைதி
26. சிறுவர் நன்னடத்தை நிறுவனங்களையும் சீர்திருத்த நிறுவனங்களையும் நிருவகித்தல்
27. பிராந்திய பகிரங்க சேவை
28. விளையாட்டுக்கள்
29. பிராந்தியத்தினுள் கூட்டிணைக்கப்படாத கழகங்களையும் சங்கங்களையும் ஒழுங்குபடுத்தல்.
30. பிராந்தியக் கடன்கள்
31. உள்நாட்டு, சர்வதேச கடன் வாங்குதல் (குறித்துரைக்கப் பட்ட ஓர் எல்லைக்கு மேற்பட்ட சர்வதேசக் கடன்வாங்கலுக்கு மத்திய அரசின் ஒருப்பாடு தேவைப் படும்)
32. பிராந்தியத்திற்கான நேரடி வெளிநாட்டு முதலீட்டையும், சர்வதேச மானியங்களையும் அபிவிருத்திசார் உதவியையும் ஒழுங்குபடுத்தலும், மேம்படுத்தலும்.
33. பிராந்திய நிதிநிறுவனங்களும், கடன் வழங்கு நிறுவனங்களும்.
34. உற்பத்தி தீர்வைகள் குறித்துரைக்கப்பட வேண்டியன.
35. குறித்துரைக்கப்பட வேண்டிய அளவுக்கு மொத்த அல்லது சில்லறை விற்பனை மீதான மொத்த விற்பனை வரவு வரிகள்.
36. சூதாட்ட வரிகளும் பரிசுப்போட்டிகள் அத்துடன் தேசிய லொத்தர்கள் தவிர்ந்த லொத்தர்கள் மீதான வரிகளும்
37. மோட்டார் வாகன உரிமைக் கட்டணங்கள்
38. காணி, மோட்டார் கார்கள் போன்ற ஆதனங்களின் கைமாற்றம் மீதான முத்திரைத் தீர்வைகள்.
39. நீதிமன்றங்களினால் விதிக்கப்படும் குற்றப்பணங்கள்.
40. நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் மீதான முத்திரைக்கட்டணங்கள் உட்பட, நீதிமன்றக் கட்டணங்கள்.
41. அரசிறைகளை மதிப்பீடு செய்தலும், சேகரித்தலும், அரசிறை நோக்கங்களுக்காக காணிப்பதிவேடுகளைப் பேணுதலும் உட்பட காணி அரசிறை.

**26ஆம் பக்கம் பார்க்க**

## 2. நிதி

2.1 தேசிய நிதி ஆணைக்குழுவொன்று அமைக்கப்படும். இது சமப்படுத்திய பிராந்திய அபிவிருத்தியை எய்தும் குறிக்கோளை மனதிற்கொண்டு, பிராந்தியத்துக்கு மானியங்களைக் குறித்தொதுக்குவதற்குப் பொறுப்புடையதாக இருக்கும்.

2.2. குறித்த சில குறித்துரைக்கப்பட்ட துறைகளில் பிராந்திய சபைகள் வரியிறுப்பனவு செய்யும் தத்துவமுடையனவாக இருக்கும். அரசியலமைப்பு ஏனைய அரசிறை பங்கிடும் ஒழுங்குகளைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

2.3 பிராந்திய சபைகள் கடன் எடுப்பதற்கும் தமது சொந்த நிதி நிறுவனங்களைத் தாபிப்பதற்கும் தத்துவமுடையனவாக இருக்கும். விதித்துரைக்கப்பட்ட எல்லைக்கும் கூடுதலாக சர்வதேச ரீதியாகக் கடன் பெறுவதற்கு மத்திய அரசின் ஒருப்பாடு தேவை.

2.4 பிராந்திய சபைகள் வெளிநாட்டு நேரடி முதலீட்டையும் சர்வதேச மானியங்கள் மற்றும் அபிவிருத்தி உதவியையும் மத்திய அரசினால் குறித்துக் கூறப்படும் அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டு பெற்றுக்கொள்ளலாம்.

## 3. சட்டமும் ஒழுங்கும்

3.1 பிராந்தியத்தின் ஆளுநரின் ஆலோசனையுடன் முதலமைச்சரினால் நியமிக்கப்பட்ட பிராந்திய பொலிஸ் ஆணையாளரின் தலைமையில் பிராந்திய பொலிஸ் சேவையொன்று இருக்கும். பிராந்திய பொலிஸ் ஆணையாளர் இயைபான முதலமைச்சருக்குப் பொறுப்புடையவராக இருப்பார் என்பதுடன், அவரின் கட்டுப்பாட்டில் பணியாற்றுவார். பிராந்திய பொலிஸ் சேவை ஆட்களுக்கும் ஆதனத்துக்கும் எதிரான சகல தவறுகளையும் புலனாய்வு செய்யும்.

3.2 அரசுக்கெதிரான தவறுகள், தேசிய பாதுகாப்புக்கான அச்சுறுத்தல்கள், தேர்தல்கள் தொடர்பான தவறுகள், மாகாணங்களுக்கிடையிலான குற்றங்கள் மற்றும் சர்வதேச குற்றங்கள் என்பவற்றைப் புலனாய்வு செய்வதற்குப் பொறுப்புடையதாக தேசிய பொலிஸ் சேவையொன்று இருக்கும். தேசிய பொலிசுக்கு தேசிய பொலிஸ் ஆணையாளர் தலைவராக இருப்பார். இவர் மத்திய அரசுக்குப் பொறுப்புடையவராக இருப்பார்.

3.3. பிராந்திய பொலிஸ் சேவை உறுப்பினர்களைச் சேர்த்தல், பிராந்தியத்துக்குள்ளாக இடமாற்றுதல், வேலையிலிருந்து நீக்குதல் மற்றும் அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன பிராந்திய பொலிஸ் ஆணைக்குழுவின் பொறுப்பாக இருக்கும்.

3.4 தேசிய பொலிஸ் ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும். பிராந்திய பொலிஸ் ஆணைக்குழுவின் ஆலோசனையுடன் பொலிஸ் அலுவலர்களை ஒரு பிராந்தியத்திலிருந்து மற்றொரு பிராந்தியத்துக்கு இடமாற்றம் செய்வதும் அதன் பணிகளுள் அடங்கும்.

3.5 தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும் பிராந்திய பொலிஸ் ஆணைக்குழுவும் அரசியலமைப்புப் பேரவையால் நியமிக்கப்படுதல் வேண்டும். பிராந்திய பொலிஸ் ஆணைக்குழுவின் நியமனத்தில் அரசியலமைப்புப் பேரவையானது சம்பந்தப்பட்ட பிராந்தியத்துக்கான முதலமைச்சரின் கலந்தாலோசனையுடன் செயலாற்றும்.

## 4. காணியும் காணிக் குடியேற்றமும்

4.1 காணி ஒரு பரவலாக்கப்பட்ட விடயமாகும். ஒரு பிராந்தியத்துக்குள்ளாக இருக்கும் அரச காணி பிராந்திய சபைகளுக்கு உரித்தாக்கப்பட்டனவாக இருக்கும். ஒதுக்கிய விடயமொன்று தொடர்பாக மத்திய அரசின் நோக்கங்களுக்குத் தேவைப்படும் ஒரு பிராந்தியத்துக்குள்ளாக இருக்கும் அரசகாணி சட்டத்தினால் தாபிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கை முறைகளுக்கிணங்க இயைபான பிராந்திய சபையின் ஆலோசனையுடன் மத்திய அரசினால் பயன்படுத்தப்படலாம்.

4.2 எதிர்காலக் காணிக் குடியேற்றத் திட்டங்களில், முதலில் மாவட்டத்தில் உள்ள ஆட்களுக்கும் பின்னர் பிராந்தியத்திலுள்ள ஆட்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

## 5. கல்வி

5.1 கல்வியும் உயர்கல்வியும் பிராந்திய நிரலில் உள்ளடக்கப்பட்ட பரவலாக்கப்பட்ட விடயங்களாக இருக்கும்.

5.2 குறித்த சில குறித்துரைக்கப்பட்ட பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் மத்திய அரசினால் நிருவகிக்கப்படும் தேசிய நிறுவனங்களாக வெளிப்படுத்தப்படும்.

5.3 தேசிய பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் தவிர்ந்த ஏனைய ஆசிரியர்களின் ஆட்சேர்ப்பு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன பிராந்திய சபையின் பொறுப்பாக இருக்கும்.

5.4 ஆசிரியர்கள் தேசிய பாடசாலைகளுக்காக அல்லது பிராந்திய பாடசாலைகளுக்காக ஆட்சேர்க்கப்படவுள்ளார்கள் என்பதைப் பொறுத்து, ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதானது மத்திய அரசினதும் பிராந்திய சபைகளினதும் பொறுப்பாக இருக்கும்.

5.5 பிராந்தியப் பாடசாலைகளில் உள்ள பாடவிதான அபிவிருத்தி பிராந்திய சபைகளின் பொறுப்பாக இருக்கும். ஆகக்குறைந்த தராத[illegible]ள் மத்திய அரசால் விதிக்கப்படு[illegible]

5.6 மத்திய அரசினது[illegible] [illegible]தியங்களினதும் பிரதிநிதிகளைக் கொண்ட தேசிய கல்வி ஆணைக்குழுவொன்று பின்வரும் பணிகளுக்குப் பொறுப்பாக்கப்பட்டதாக இருக்கும்.

(அ) பிராந்திய முதலமைச்சர்களின் கலந்தாலோசனையுடன் தேசிய பாடசாலைகளையும் பல்கலைக் கழகங்களையும் கண்டறிதலு[illegible] அத்தகைய தேசிய பாடசாலைகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் அனுமதி பெறுதற்கான தகைமைகளை விதித்துரைத்தலும்.

(ஆ) ஆசிரியர்களின் பயிற்சி, பரீட்சை, பாடவிதானம் மற்றும் தொழிலுக் கமர்த்தல் தொடர்பிலான ஆகக்குறைந்த தராதரங்களை வகுத்தல்.

## 6. நீதித்துறை நிர்வாகம்

6.1 ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஒரு மேல் நீதிமன்றம் இருத்தல் வேண்டும். மேல் நீதிமன்றமானது பிராந்தியத்துக்குள்ளாக குற்றவியல், மேன்முறையீட்டு மற்றும் எழுத்தாணை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும்.

6.2 பிராந்தியத்தின் முதலமைச்சரின் கலந்தாலோசனையுடன் அரசியலமைப்புப் பேரவையினால் நியமிக்கப்படும் பிராந்திய நீதிச் சேவை ஆணைக்குழு மேல் நீதிமன்றத்தின் முதன்மை நீதிபதியையும் முதுமுறை வரிசையில் அடுத்துவரும் இருமேல் நீதிமன்ற நீதிபதிகளையும் கொண்டதாக இருக்கும்.

6.3 பிராந்திய நீதிச் சேவை ஆணைக்குழு பிராந்தியத்துக்குள்ளாக பிராந்திய மேல்நீதிமன்ற நீதிபதிகளையும் சிறிய நீதித்துறை நீதிபதிகளையும் நியமிப்பதற்குப் பொறுப்புடையதாக இருக்கும். பிராந்திய நீதிச்சேவை ஆணைக்குழு, நீதிபதிகளை இடமாற்றுதல் தொடர்பாக, தேசிய நீதிச்சேவை ஆணைக்குழுவைக் கலந்தாலோசிக்கும்.

6.4 ஆளுநர் பிராந்தியச் சட்டத்துறைத் தலைமை அதிபதி ஒருவரை நியமிப்பார். இவர் பிராந்திய சபையினால் நிறைவேற்றப்படும் சட்டங்களின் அரசியலமைப்புக்கு முரணாகாத தன்மை பற்றி ஆளுநருக்கு ஆலோசனை அளிப்பார். சட்டமொன்று அரசியலமைப்புக்கு முரணானதாகக் காணப்பட்டால், பிராந்திய சட்டத்துறைத் தலைமை அதிபதி, ஆளுநருடனான ஆலோசனையின் பின்னர் உயர் நீதிமன்றத்தின் அல்லது மத்திய அரசுக்கும் பிராந்தியத்துக்கும் இடையே

பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்கெனச் சிறப்பாக நிறுவப்பட்ட வேறு ஏதேனும் நியாய சபையின் முன்னர் வழக்குத்தொடுப்பார்.

### 7. பகிரங்க சேவை

7.1 பிராந்திய சபைகளினால் தொழிலுக்கமர்த்தப்படும் அல்லது மாற்றச் சேவைக்கு அழைக்கப்படும் எல்லா ஆட்களினதும் ஆட்சேர்ப்பு, ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் அவர்களைப் பதவியிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குப் பொறுப்பாக இருப்பதற்கென (இயைபான முதலமைச்சரின் ஆலோசனையுடன் அரசியலமைப்புப் பேரவையினால் நியமிக்கப்படும்) பிராந்திய பகிரங்க சேவை ஆணைக்குழு ஒன்றிருக்கும்.

7.2 பிராந்தியத்தின் வெளியே பிராந்திய பகிரங்க சேவை ஆணைக்குழு அத்தகைய எல்லா ஆட்களினதும் இடமாற்றத்தைச் செய்யும்போது (அரசியலமைப்புப் பேரவையினால் நியமிக்கப்பட்ட) தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவைக் கலந்தாலோசிக்கும்.

### 8. அதிகாரப் பரவலாக்கல் ஆணைக்குழு

மத்திய அரசுக்கும் பிராந்தியத்துக்குமிடையே ஏற்படும் பிணக்குகளை அல்லது பிராந்தியங்களுக்கிடையிலான பிணக்குகளை தீர்த்துவைப்பதற்கென அரசியலமைப்புப் பேரவையினால் நியமிக்கப்பட்ட அதிகாரப்பரவலாக்கல் மீதான நிரந்தர ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும். ஆணைக்குழு மத்தியஸ்தம் மற்றும் நீதித்தீர்ப்பளித்தல் தொடர்பான தத்துவங்களைக் கொண்டிருக்கும்.

### 9. பிராந்தியங்களின் ஒன்றியம்

9.1 (அ) ஐக்கிய இறைமையைக் கொண்ட இலங்கைக் குடியரசு பிராந்தியங்களின் ஒன்றியமாக இருப்பதற்கும் (ஆ) குடியரசின் ஆள்புலம், முதலாவது அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிராந்தியங்களையும் அதன் ஆள்புல நீர்ப்பரப்புக்களையும் கொண்டிருப்பதற்கும் (இ) மக்களின் சட்டமாக்கல் தத்துவம் இதனகத்தின் பின்னர் ஏற்பாடு செய்யப்படும் அளவுக்கு பாராளு மன்றத்தினாலும், பிராந்திய சபைகளினாலும் மக்கள் தீர்ப்பொன்றில் மக்களினாலும் பிரயோகிக்கப்படுவதற்கும் (ஈ) மக்களின் நிறைவேற்றுத்தத்துவம் இதனகத்தின் பின்னர் ஏற்பாடு செய்யப்படும் அளவுக்கு பிரதம மந்திரியினதும், அமைச்சரவையினதும் ஆலோசனையின் மீது செயலாற்றும் குடியரசின் ஜனாதிபதியினாலும் அந்தந்த முதல் அமைச்சர்களினதும் பிராந்திய அமைச்சரவைகளினதும் ஆலோசனைமீது செயலாற்றும் ஆளுநர்களினாலும் பிரயோகிக்கப்படுவதற்கும் அரசியலமைப்பு ஏற்பாடு செய்யும்.

9.2 தற்போதுள்ள அரசியலமைப்பின் உறுப்புரை 76 நீக்கப்படும்.

### 10. பரவலாக்கலின் பொருள்

10.1 பிராந்திய சபைகள், அவற்றுக்கென பரவலாக்கம் செய்யப்பட்ட ஆட்சி எல்லையினுள் புறநீங்கலாக சட்டவாக்கத் தத்துவத்தையும், நிறைவேற்றுத் தத்துவத்தையும் பிரயோகிக்கும் விடயங்களும், பணிகளும் மத்திய அரசுக்கும் பிராந்தியங்களுக்கும் இடையில் பின்னிணைப்பில் உள்ளவாறு பகிர்ந்தளிக்கப்படும்.

## நாவலாசிரியரை வீடுதேடிச் சென்று கௌரவிப்பு

இலங்கையின் மூத்த எழுத்தாளரும், நாவலாசிரியருமான சுபைர் இளங்கீரனை வீடு தேடிச்சென்று சந்தித்த கலாசார சமய விவகார பிரதி அமைச்சர் பேராசிரியர் சுரவீர, பத்தாயிரம் ரூபாவிற்கான காசோலையை வழங்கி கௌரவித்தார். அமைச்சருடன் கலாசார அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. இ. யோகநாதன், இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க நிறைவேற்றுக் குழு உறுப்பினர் திரு. அந்தனி ஜீவா ஆகியோர் சென்றிருந்தனர்.



## கலை இலக்கியம்

கலை இலக்கியப் பிரியர்களே,

கலை, இலக்கியம் சம்பந்தமாக நீங்கள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், நூல் வெளியீட்டு விழாக்கள் போன்ற செய்திகளைப் படங்களுடன் பிரசுரிக்க திங்கள் தயாராகவுள்ளது.

எனவே உங்கள் பகுதிகளில் இடம்பெறும் கலை, இலக்கிய நிகழ்வுகளை திங்களில் பிரசுரிக்க விரும்பினால் அவற்றை எமது திங்கள் பணிமனைக்கு அனுப்பி வையுங்கள்.

## மகாபொல புலமைப்பரிசு



ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க கடந்த ஜூலை 3ஆம் திகதி 50 பல்கலைக்கழக மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்களை வழங்கினார்.

இவ்வருடம் 4,603 மாணவர்கள் புலமைப் பரிசில்கள் பெறும் தகுதி பெற்றுள்ளனர்.

நாட்டின் பல்வேறு பிராந்தியங்களைச் சேர்ந்த 50 மாணவர்கள் புலமைப் பரிசில்களை வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

"நாடு இரு சவால்களை எதிர்நோக்கி இருக்கிறது. ஒன்று வறுமை மற்றது வடக்கு - கிழக்கு யுத்தம். இவ்விரண்டையும் எதிர்நோக்க அரசு திடசங்கற்பம் பூண்டுள்ளது", என்று ஜனாதிபதி மாணவர் மத்தியில் உரை நிகழ்த்திய போது கூறினார்.

"நாட்டின் 2,535 ஆண்டு வரலாற்றில் தேசிய ஒருமைப் பாட்டுக்கு, அச்சுறுத்தல் விடுக்கப் பட்டிருக்கும். இப்படியான எதிர் கொள்ள முடியாத சவால்களை நாடு ஒரு போதும் கண்டது இல்லை. வறுமையை ஒழிப்பது ஒரு சவால். வடக்கு கிழக்கு யுத்தம் மற்றது. இந்தச் சவால்களை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்" என்றும் அவர் சொன்னார்.

நாம் அனைவரும் இலங்கையர் என்ற உணர்வை கொண்டிருப்பது அவசியமாகும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

எல்.ரி.ரி.ஈ. யை தோற்கடித்தாலும் கூட, இனப் பிரச்சினைக்கு இறுதியான தீர்வு இருக்க முடியாது.

ஒரே நாடு என்ற வகையில் நமது மத்தியில் காணப்படும் வேறுபாடுகளை களைந்து ஒன்றுபட வேண்டும்.

இலங்கையர் என்று நம்மைப் பொதுவாக அடையாளங்காட்டிக் கொள்ளாத வரையில், ஒருமைப் பாட்டை அடைய முடியாது" என்றும் ஜனாதிபதி கூறினார்.

## மனித உரிமைகள் செயலணி

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க, மனித உரிமைகள் செயலணியின் 5 அங்கத்தவர்களுக்கான நியமனக் கடிதங்களை அண்மையில் வழங்கினார்.

முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் திரு.ஸி.டி. ஜான்ஸ் செயலணியின் தலைவர்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னாள் தலைவர் திரு. கே. பாலகிட்னர், பேராசிரியர் சிறானி பண்டாரநாயக்க, திரு. பெட்ரிக் பெர்னாண்டோ, ஜனாப். ஏ.என்.எம். சஹீட் ஆகியோர் ஏனைய அங்கத்தவர்கள் ஆவர்.

1989-1991 ஜே.வி.பி. பயங்கரவாத காலக்கட்டத்தில் பெரும்பான்மை சிங்கள சமூகத்திலிருந்தே மனித உரிமைகள் மீறல் தொடர்பான குற்றச்சாட்டுகள் கிளம்பின.

## பெண்கள் பற்றிய ஒரு நாள் கருத்தரங்கு

நான்காவது சர்வதேச பெண்கள் மாநாட்டை முன்னிட்டு, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும், பெண்கள் கல்வி அறிவு நிறுவனமும் இணைந்து நடத்திய பெண் விடுதலையும் சமுதாய விமோசனமும் என்ற கருத்தரங்கில் தலைமை வகித்த பெண்ணின் குரல் ஆசிரியை திருமதி பத்மா சோமகாந்தன் உரையாற்றுகிறார். அருகில் வீரகேசரி இணை ஆசிரியர் கலாநிதி சந்திரிகா சுப்பிரமணியன், திருமதி சுதா விவேகானந்தன், திருமதி சாந்தி சச்சிதானந்தம் ஆகியோர் காணப்படுகின்றனர்.

இந்தக் கருத்தரங்கு கொழும்பு, கொள்ளுப்பிட்டியிலுள்ள சசகவா மண்டபத்தில் நடைபெற்றது.






# அச்சுறுத்தல்களை மீறி வளர்ச்சிகாணும் உல்லாசப் பயணத்துறை!













**எம்.ஏ. ஹஸன்**
பத்திரிகைத் தொடர்புத்துறை அதிகாரி

இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் கடந்த இரு தசாப்தங்களாக நிலவி வரும் வன்செயல் மற்றும் அதன் எதிரொலியாக இடைக்கிடையே நாட்டின் ஏனைய பகுதிகளில் இடம் பெறும் வன்செயல்கள் உல்லாசப் பயணத்துறையை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை என உல்லாசப் பயண அதிகார வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

இலங்கை அதன் பிரதான வெளி நாட்டு வருமானங்களில் ஒன்றாக உல்லாசப் பிரயாணத்துறையையும் கருதி அதன் அபிவிருத்தியிலும் விசேட கவனம் செலுத்தி வருவதோடு மாத்திரமல்லாமல் முன்னேற்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

புதிய அரசு, பொருளாதார சமூக அபிவிருத்தியின் முக்கிய நடவடிக்கை யாக உல்லாசப்பயணத்துறையை அபிவிருத்தி செய்வதை அதன் கொள்கையாக ஏற்றுள்ளது.

அண்மையில் பயங்கரவாதி களினால் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைக்கப்பட்ட குண்டு அமளிதுமளியுடன் பயங்கர வாதக் குழுக்களினால் இலங்கைக்கு வரும் உல்லாசப் பிரயாணிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதும் தெரிந்த விடயமேயாகும். இது பற்றி உடனடி யாக செயற்பட்ட அரசு இலங்கைக்கு விஜயம் செய்யும் உல்லாசப்பயணி களின் பாதுகாப்பை உத்தரவாதப் படுத்தியதோடு கொழும்பு, கட்டு நாயக்கா விமானநிலையம் போன்ற முக்கிய இடங்களும் அவை முன்பு இருந்தது போன்றே பாதுகாப்பாக இருக்கின்றது என அரசு அறிக்கை விட்டதோடு அப்பகுதிகளின் பாதுகாப்பையும் மீள் உறுதி செய்வதாகவும் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது வருடாந்தம் 4 இலட்சம் உல்லாசப் பயணிகள் இலங்கை வருகின்றனர். இரண்டாயிரமாம் ஆண்டளவில் இத்தொகையை 8,74,000 ஆக அதிகரிக்கச் செய்வதற்காக 10 ஆண்டு பாரிய திட்டம் ஒன்று தற்போது அமுலில் உள்ளது. அமுலில் உள்ள

தற்போதைய திட்டத்தின் அடிப்படையில் வருடாந்தம் 10 வீத அதிகரிப்பு என்ற நிலையில் உல்லாசப் பயணத்துறை மூலம் தற்போது கிடைக்கும் வெளிநாட்டு வருமானம் 225 மில்லியன் டொலர்களிலிருந்து 2001 ஆம் ஆண்டில் 700 மில்லியன் டொலர்களாக அதாவது மும்மடங்காக அதிகரிக்கப்படுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

உல்லாசப் பயணத்துறையைப் பொறுத்தவரை ஐரோப்பாவே இலங்கையின் பிரதான சந்தையாக விளங்குகின்றது. ஜேர்மன், ஐக்கிய இராச்சியம் ஆகிய இரு நாடுகளி லிருந்து பெரும் குழுக்கள் வருடாந்தம் இலங்கை வருகின்றனர். 1994இல் ஜேர்மனியிலிருந்து 93,528 உல்லாசப் பயணிகளும் ஐக்கிய இராச்சியத்தி லிருந்து 47,766 பேர்களும் இலங்கை வந்தனர் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஐரோப்பிய நாடுகளிலிருந்து இலங்கை வரும் உல்லாசப் பயணிகளின் தொகையை அதிகரிக்கச் செய்ய இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையினால் நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை கீழைத்தேய நாடுகளி லிருந்து இலங்கைக்கு உல்லாசப் பயணிகளை வருவிப்பதற்கான நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது அமுலில் உள்ள பத்து ஆண்டுத்திட்ட முடிவில் உல்லாசப் பிரயாணத்துறை வெகுவாக அபிவிருத்தியடைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை அவற்றிற்குத் தேவையான அடிப்படை வசதிகளும் அதிகரிக்கப்படவுள்ளன. இத்திட்டத்தின்படி 10,700 ஆக உள்ள அறை வசதிகள் தொகை திட்ட முடிவில் 18,000 ஆக அதிகரிக்கப்பட வுள்ளதோடு பொழுது போக்கு ஏனைய உல்லாச வசதிகளும் அதிகரிக்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.



இயற்கை அன்னை நமக்களித்த வரங்கள்

இலங்கைக்கு அந்நியச் செலாவணி யைத் தேடித்தருவதில் மூன்றாம் இடத்தை வகிக்கும் இத்துறையை வெளிநாடுகளில் மேலும் பிரபல மடையச் செய்ய அரசு தற்போது தனியார்துறை உதவிகளையும் பெற்று வருகின்றது. இது இத்துறையின் முன்னேற்றத்தை மேலும் உறுதி செய்வதாக அமையும் எனலாம்.



மாணிக்கமும் நகைகளும் உல்லாசப்பயணிகளுக்காக விஷேட அமைப்பில் தயார் செய்யப்படுகின்றன.

## உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் கம்பியூட்டர் மயம்

கொழும்பு உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் கம்பியூட்டர் மயப்படுத்தப்பட்டன. இதற்கு வசதியாக அண்மையில் கொழும்பு உயர்நீதிமன்றக் கட்டிடத் தொகுதியில் கம்பியூட்டர் பிரிவு ஒன்று புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நீதிமன்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கும் வழக்கு விசாரணைகள் காலதாமதமாவதை தடுப்பதற்கும் வசதியாகவே இந்த கம்பியூட்டர் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

இந்த கம்பியூட்டர்மய திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியும் அமெரிக்க உதவித்திட்ட நிதியத்திலிருந்தும் நிதியுதவி கிடைத்திருக்கிறது.

இத்திட்டத்தின் மூலம் நீதிமன்ற நடவடிக்கைகள் துரிதமாக செயற் படும் என்று நீதிமன்ற வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

## நூல் அறிமுகம்

எழுத்தாளர்களே! இலக்கியப் படைப்பாளர்களே !

உங்களால் வெளியிடப்படும் நூல்களை திங்களின் வாயிலாக அறிமுகம் செய்து வைக்க விரும்புகிறோம்.

எனவே எமது திங்களில் உங்கள் நூல்களை அறிமுகம் செய்ய விரும்பினால் அவற்றின் இரு பிரதிகளை எமக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி

**ஆசிரியர்**
**திங்கள்**
**அரசாங்க தகவல் திணைக்களம்**
**லக்ஷ்மன் பணிமனை**
**இல. 321, காலி வீதி,**
**கொழும்பு 03.**

தொலைபேசி : 577016, 577018
ஃபெக்ஸ் : 576956

# பத்திரிகைச் சுதந்திரம் பாதுகாக்கப்படும்

பத்திரிகைச் சுதந்திரத்தை பேணுவதில் எமது அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது. வெகுசனத் தொடர்புத்துறை சம்பந்தமான கொள்கை ஒன்றையிட்டு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணி பொது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போது வெகுசனத் தொடர்புத்துறை சுதந்திரம் முக்கியமான ஒரு விவகாரமாக எடுக்கப்பட்டது என்று வெகுசன தொடர்புசாதன, உல்லாச பயணத்துறை, விமான போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா குறிப்பிட்டார்.

கொழும்பு ஹோட்டல் லங்கா ஒபரோயில் நடைபெற்ற பத்திரிகை பேரவையின் அனைத்துலக முதலாவது மாநாட்டையும், நான்காவது சர்வதேச மாநாட்டையும் தொடக்கி வைத்த அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா மேலும் பேசுகையில்.

பத்திரிகையாளர்களின் சுதந்திரம் பேணப்பட வேண்டும். பத்திரிகையாளர்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தாக்கப்படுவதை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்பதில் எமது அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது. கருத்து சுதந்திரம் இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் மூலம் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை மேலும் விரிவுபடுத்தும் நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

கடந்த 12 வருடங்களாக இனப்பிரச்சினை இந்நாட்டில் வளர்ந்து வந்துள்ளது. கடந்த பொதுத்தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலின் போதும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி இப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான ஆணையை பெற்றுக் கொண்டது.

இதன்படி விடுதலைப் புலிகளுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தையை ஆரம்பித்தார். ஆனால் இப்பேச்சுவார்த்தை முயற்சிகளிலிருந்து புலிகள் இயக்கம் வாபஸ் பெற்றுக் கொண்டது. யுத்த களத்திற்கு திரும்பிய புலிகள் எதிர்ப்பு நடவடிக்கையை ஆரம்பித்தார்கள்.

இதன் மூலம் அரசாங்கமும் இப்பிரச்சினைக்குள் இழுக்கப்பட்டது. வடபகுதியில் உள்ள அப்பாவித்தமிழர் உட்பட மக்களின் உயிர்களையும் பாதுகாக்க வேண்டிய கடமை அரசினுடையது.

இப்பிரச்சினைக்கு இறுதியான தீர்வு ஒன்றை காண்பதற்காக சில யோசனைகளை ஜனாதிபதி ஆகஸ்ட் 3-ம் திகதி அறிவித்தார். இந்த யோசனைகள் இப்பொழுது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக வைக்கப்பட்டுள்ளன. இவை பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முன்பாக பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட உள்ளன. இந்த யோசனைகளுக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம். அத்துடன் இது சட்டமாவதற்கு சர்வஜன வாக்கெடுப்பொன்றில் மக்களின் அங்கீகாரமும் பெறப்பட வேண்டும்.

வன்செயல்கள் நிறுத்தப்பட்டு சமாதானம் மீண்டும் கொண்டுவரப்பட்டு ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும். ஒரு இறைமையுள்ள நாட்டில் இன, மத, சாதி வேறுபாடுகளுக்கு அப்பால் சமத்துவத்துடன் வாழ்வதற்கு இது வழி வகுக்க வேண்டும் என்றார் அமைச்சர்.

பத்திரிகைகள் பேரவையின் தலைவர் ஏ.ஏ.டி. சில்வாவின் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் பிரதி அமைச்சர் அல்ஹாஜ் அலவி மௌலானாவும் கலந்து கொண்டார். பேராசிரியர் டேவிட் புளுட், அனைத்துலக பத்திரிகை பேரவையின் பொதுச் செயலாளர் ஆர். குணசிங்கம் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.



**தர்மசிறி சேனாநாயக்க**
வெகுசனத் தொடர்புசாதன,
உல்லாசப்பயணத்துறை விமான
சேவைகள் அமைச்சர்

(படமும்-தகவலும் : **அந்தனிஜீவா)**



மாநாட்டுத் தொடக்கவிழாவைபவத்தின் போது தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அருளுரை வழங்குவதையும், முதல்வரிசையில் வீடமைப்பு, பொதுவசதிகள் பிரதி அமைச்சர் மாண்புமிகு பெ. சந்திரசேகரன், கொழும்பு மாநகர பதில் முதல்வர் கே. கணேசலிங்கம், ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்திற்க காணலாம்.

# சிந்தனைமயமான சமய வாழ்க்கைக்கு இளைஞர்களை ஈடுபடுத்த வேண்டும்.

- டாக்டர் லோகநாதன்

**"இளைஞர்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு அவர்களையும் சமய வாழ்க்கைக்கு ஈடுபடுத்துவது மிக அவசியமானது. அவர்களின் மன உளைச்சல்கள், தாக்கங்கள், பிரச்சினைகள் என்பவற்றைப் புரிந்து நாம் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும், அறவழிச் சிந்தனைகளை அவர்களது சிந்தனை ஓட்டத்திற்குத் தக்கவாறு விளக்க வேண்டும். உலக வாழ்க்கையை வெறுத்து சமய வாழ்விற்கு திரும்ப வேண்டும் என்று போதித்தால் அவர்களின் வெறுப்பையே சம்பாதிக்க நேரும்."**

இவ்வாறு செப்டெம்பர் 8, 9, 10ஆம் திகதிகளில் வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்ற உலக சைவப் பேரவையின் நான்காவது மாநாட்டிற் கலந்துகொண்டு பேசிய மலேஷிய அறிஞர் டாக்டர் கே. லோகநாதன் குறிப்பிட்டார்.

உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை, கொழும்பு மகளிர் இந்துமன்றம் என்பன இணைந்து இம்மாநாட்டினை ஏற்பாடு செய்திருந்தன.

மாநாட்டின் சிறப்பாளர்களாக, பேரவையின் செயலாளர் நாயகம், தவத்திரு சிவநந்தி அடிகளார், தமிழ்நாடு பேரூர் ஆதீன முதல்வர், தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார், பழனி சாதுமடம் சாது சண்முக அடிகளார், இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தாஜி ஆகியோர் கலந்து கொண்டு அருளுரை வழங்கினர்.

தொடக்கவிழா வைபவம் செப். 8ஆம் திகதி காலை நடைபெற்றது. வீடமைப்பு பொது வசதிகள் பிரதி அமைச்சர் பெ. சந்திரசேகரன், கொழும்பு மாநகர பதில் முதல்வர். சே. கணேசலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். உலக சைவக் கொடியினை தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஏற்றி வைத்தார்.

அன்று பிற்பகல் சைவப் பேரவையின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாநாட்டை ஒட்டி நடத்தப்பட்ட அகில இலங்கைப் போட்டிகளிற் பங்குபற்றி முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசு, சான்றிதழ் என்பன வழங்கப்பட்டன. மாநாட்டு சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

9, 10ஆம் திகதிகளில் "இன்றைய உலகச் சூழலில் சைவ மறுமலர்ச்சிக்கான செயற்திட்டங்கள்" எனும் தலைப்பில் இரண்டு நாட் கருத்தரங்கு இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளவென மலேஷியாவிலிருந்து டாக்டர் கே. லோகநாதன், திரு.என். திருவாசகம், திருமதி. சுபாஷினி லோகநாதன், தென் ஆபிரிக்காவிலிருந்து திரு. மோகன் நாயுடு, சிங்கப்பூரிலிருந்து திரு. எஸ். கிருஷ்ணன், தமிழகத்திலிருந்து பேராசிரியர் வை. இரத்தினசபாபதி, பேராசிரியர் ச. கங்காதரன், கலாநிதி க.ப. அறவாணன் ஆகிய பிரதிநிதிகள் இலங்கை வந்திருந்தனர்.

இலங்கை அறிஞர்களான திரு. செ. குணரெத்தினம், வித்துவான் க.ந. வேலன், திரு.வ. சிவராஜசிங்கம்,

திரு.ஏ. குணநாயகம், கலாநிதி வி. இராமகிருஷ்ணன், திரு.கு. சோமசுந்தரம், திருமதி பூமணி குலசிங்கம், திரு. இ. யோகநாதன், வைத்தியக் கலாநிதி கே. வேலாயுத பிள்ளை, திரு. க. சண்முகலிங்கம், திரு. சி. குமாரசாமி, திருமதி. சாந்தி நாவுக்கரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சைவமும் இளைஞர்களும், சைவமும் சமூகப்பிரச்சினைகளும், சைவமும் புலம்பெயர்ந்தோர் வாழ்வும், சைவமும் கலைகளும் ஆகிய தலைப்புக்களில் மிக விரிவான ஆய்வுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

கொழும்பு மகளிர் மன்றத்தின் அனுசரணையோடு இரண்டு தினங்கள் திருமுறைப் பண்ணிசை, தெய்வத்தாய் - நாட்டிய நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் மிகச்சிறப்பாக இடம்பெற்றன.

கலாநிதி லோகநாதன் அவர்கள் தொடர்ந்து பேசுகையில்,

"கற்பனைக் கவிதைகளையும், காதலை அடிப்படையாகக் கொண்ட கதைகளையும் வீணான உணர்ச்சி களைத் தூண்டும் பாடல்களையும் எழுதி பழக்கப்பட்டு விட்ட இளைய சமுதாயத்தினரிடையே சிந்தனை களையும், ஆய்வுகளையும் மையமாகக் கொண்ட கட்டுரைகளை எழுதத் தூண்ட வேண்டும்" சைவ ஆதீனங்களும், சமய அமைப்புகளும் சிந்தனையைத் தூண்டவல்ல மாநாடுகள், கருத்தரங்குகள் போன்றவற்றை நடத்த வேண்டும்.

முதியவர்கள் இருக்கும் இடத்தில் புதுமைக்கு இடம் இல்லாது போய் விடுகின்றது. பழங்கதைகளையே கூறி இளைஞர்களை இவர்கள் கவராது விடுகின்றனர். ஆழ்ந்த சிந்தனையும், ஆய்வுநோக்கும் முடக்கப்படாதவாறு இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டும். துறவறத்தைப் பற்றிப் பேசாமல், அறநெறிப்பிழையாத சமய வாழ்க்கை இல்லற வாழ்விலும் தேவை என அவர்களுக்கு உணர்த்த வேண்டும். முன்னேறத் துடிக்கும் இளைஞர்களை முடக்கி வைக்கக் கூடாது. இறையருட்துணையும், தன்னம்பிக்கையும் மகத்தான சாதனைகளை ஆற்றும் என்ற நிலை இளைஞர்களிடம் ஏற்பட வேண்டும்." எனக் குறிப்பிட்டார்.

கருத்தரங்கில் பேராளர்களின் ஒருவராகக் கலந்து கொண்ட புதுச்சேரி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி க.ப. அறவாணன் அவர்கள், "சைவமும், கலைகளும்" எனுந் தலைப்பில் உரை நிகழ்த்தும்போது, அமர்த்தப் பெற்றிருந்ததையும், தேவாரம் ஓதப் பெற்றதையும் தஞ்சைப் பெரிய கோயில் முதலான பல கோயில் கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன. பிற்காலத்து அருணகிரியார் தம் திருப்புகழ் முழுவதாயும் பல்வேறு சிவத்தலங்களில் இசை மழையாகப் பொழிந்து கொட்டியதை அவர்தம் வரலாறு எடுத்துரைக்கின்றது. தமிழ் இசையோடும் சைவத்தோடும் இணைந்த பலரை வரலாற்றில் இருந்து நிறைய காட்ட முடியும்.



மாநாட்டில உலக சைவக்கொடியை தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஏற்றிவைப்பதைப் படத்திற் காணலாம். படத்தில் தவத்திரு சிவநந்தி அடிகள், தவத்திரு சாதுசண்முக அடிகள், இலங்கைக் கிளைத் தலைவர் கா. தயாபரன் ஆகியோரும் பேரவை உறுப்பினர்களும் காணப்படுகின்றனர்.

"சிற்பக் கலை, ஓவியக்கலை ஆகியவற்றுக்கு அடுத்ததாக அல்லது இணையாகக் கருதத்தக்க தோற்றமும், வளர்ச்சியும், பெருமையும் உடையது இசைக் கலையாகும். தமிழர் வழிபாட்டு முறையை இசையிலிருந்து பிரிக்க முடியாதது என்பதைப் பக்தி இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன. சைவ நாயன்மார்களால் தமிழ் இசை முறைப்படி தேவாரப் பாடல்கள் காலந்தோறும் இசைக்கப்பட்டன. திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலானோர் வரலாறு இசைக்கருவி யோடு இணைத்து அமைந்தது ஆகும். பக்தி இலக்கியத்திற்கு முன்பே பரிபாடல், தமிழிசை, தாளம், பண் ஆகிய வகைதொகையோடு அமைக்கப் பட்டிருந்ததைக் காணுகிறோம். கோயில்களில் இசை வல்லார் தெலுங்கு மொழியின் தலையீடு செல்வாக்கும் தமிழர் வரலாற்றில் குறுக்கிடுகின்ற வரை தமிழர்க்கே உரிய இசை சிறந்து வளர்ந்து இருந்தது. தொடக்கத்தில் மானா சக்தி ஆட்டம் பாட்டத்தில் இருந்து அறியப் பெற்றது என்ற வரலாற்றையும் தமிழ் இசை இணைப்பையும் இணைத்துக் கருதின் தமிழர் இசைப் பழைமை தெளிவாகப் புலப்படும்.

இசைக் கலைக்கு இணையாகச் சுட்டிக் காட்ட வேண்டியது ஆடற்கலையாகும். சிவனின் ஒரு தோற்றமான நடராச உருவம் உலகப் புகழ்பெற்ற ஒன்றாகும். இவ்வாடல் வல்லான் உருவம், சைவநாயன்மார் காலத்தில் உருக் கொண்டு, பிற்காலச்

சோழர் காலத்தில் மிகப்பெரிய அளவு பரவிய ஒன்றாகும். நடராச உருவத்தின் ஆயிரக்கணக்கான வெண்கலப் படிமங்களாகும். பல்லாயிரக்கணக்கான படைப்பு உருவச் சிற்பங்களும் தமிழகக் கோயில்களில் காணப்படுகின்றன. ஆடற் கலையில் தமிழர் பெரும் வல்லுநர் என்பதைச் சிலப்பதிகாரமும், குறிப்பாக அரங்கேற்றுகாதையும் குன்றக்குரவையும், ஆய்சியர் குரவையும் எடுத்துக்காட்டும். மாதவி ஆடலிலும், யாழ் மீட்டுவதிலும், இசை பாடுவதிலும் பெரும் ஆற்றல் பெற்றிருந்தாள் என்று சிலப்பதிகாரம் எடுத்துக் காட்டுகின்றது. ஆடல், இசை தொடர்பான இலக்கண நூல்களைத் தமிழர் பெற்றிருந்தனர் என்று அடியார்க்கு நல்லார் உரை தெளிவுபடுத்துகின்றது. சோழர் காலம் தொடங்கி, கோயில்களில் ஆடல்வல்ல மகளிர் அமர்த்தப் பெற்றிருந்ததைக் கல்வெட்டுச் செய்திகள் வலியுறுத்துகின்றன. கூத்து என்பதே ஆடலையும், நாடகத்தையும் குறிக்கும் சொல்லாகத் தமிழரிடையே புழங்கியது. வேத்தியல் கூத்து, பொதுவியல்கூத்து என்ற வழக்காறுகளும் இருந்தன நாடகத்தமிழ் ஒரு காலத்தில் பாட்டும் நடனமுமாகவே இருந்தது" எனக் குறிப்பிட்டார்.

உலகசைவப் பேரவை இலங்கைக் கிளையின் தலைவர் திரு. கா. தயாபரன் அவர்கள் தலைமையில் பல குழுவினர் மகாநாட்டின் வெற்றிக்காக உழைத்தமை குறிப்பிடத்தக்கது.

---

**உலகம் முழுவதும் 757 மிருக காட்சி சாலைகள் உள்ளன. மிகப்பெரிய மிருக காட்சி சாலை நமீபியா நாட்டில் உள்ள எடோஷா நேஷனல் பார்க் ஆகும். 1907-ம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்த உயிரியல் பூங்கா 29525 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ளது.**

---



அனைத்துலக பத்திரிகை பேரவை பொதுச் செயலாளர் மலேசியாவைச் சேர்ந்த ஆர். குணசிங்கம் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா அவர்கட்கு பொன்னாடை பொன்னாடை போர்த்தி கௌரவிக்கின்றார்

(படமும் தகவலும் அந்தனி ஜீவா)

**17ஆம் பக்கத் தொடர்ச்சி ...**

42. கனிப்பொருள் உரிமைகள் மீதான வரிகள்
43. நிரலில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கருமங்கள் தொடர்பில் சட்டங்களுக்கு எதிரான தவறுகள்.
44. பிராந்திய நிரலில் உள்ள விடயங்கள் சம்பந்தமான குற்றப்பணங்கள்.
45. பிராந்திய மட்டத்தில் திட்டமிடுதல்.
46. தேசிய சுவடிக் கூடங்களும், நூதன சாலைகளும், தேசிய முக்கியத்தவும் வாய்ந்தனவென சட்டத்தினால் வெளிப்படுத்தப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சி அமைவிடங்களும்.
47. தேசிய சுற்றாடலும் உல்லாசப் பயணம்மீதான தேசிய கொள்கையும்.
48. விசேடித்த தேசிய வீடமைப்பு நிகழ்த்திட்டங்கள்.
49. விசேடித்த தேசிய வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்.
50. இளைஞர் மற்றும் மகளிர் அலுவல்கள்
51. பௌத்தமதம்
52. தேசிய விளையாட்டுகள் நிருவாக மற்றும் உள்ளகக் கட்டமைப்பு அபிவிருத்தி.
53. தேசிய (இயற்கை மற்றும் சூழல்) அனர்த்தங்கள் மற்றும் கொள்ளை நோய்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் தலையிடுதல்.
54. தொழில் பிரமானங்களும் தரங்களும்.
55. ஒதுக்கிய நிரலில் கூறப்பட்ட எவையேனும் கருமங்களின் நோக்கத்துக்கான நில அளவைகள்.
56. இந்நிரலில் உள்ள கருமங்களுள் எது தொடர்பாலுமான சட்டங்களுக்கெதிரான தவறுகள்.
57. ஏதேனும் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் கட்டணங்கள் நீங்கலாக, இந்நிரலிலுள்ள கருமங்களுள் எது தொடர்பிலுமான கட்டணங்கள்.
58. பகிரங்க பயன்பாட்டு உள்ளமைப்பு அபிவிருத்தி.

# தமிழ்மொழி அமுலாக்கலில் நிலவும் குறைபாடுகள் விரைவில் தீர்க்கப்படும்

**அரச கரும மொழி ஆணையாளர்**

மொழியறிவு ஒருவருக்கு அதிக பயனைத்தருகின்றது. மொழி இன்மையால் ஏற்படும் விபரீதங்களும் அனந்தம். சுமார் ஈராண்டுகளுக்கு முன்னர் ஆஸ்திரேலியாவில் ஒரு நோயாளி தனது நோயைப்பற்றி டாக்டருக்கு எடுத்துச்சொல்லும் அளவுக்கு மொழியறிவின்மையால் திண்டாடியுள்ளார். இதனால் அவர் தனது சுவாசப்பையையே இழக்க நேரிட்டது.

ஆஸ்திரேலிய பாராளுமன்றத்தில் கூட அண்மையில் பிரதமர் முன்னிலையில் இச்சம்பவம் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. குறிப்பாக ஆஸ்பத்திரி நடவடிக்கைகளின் போதும் நீதிமன்ற நடவடிக்கைகளின் போதும் மொழிபெயர்ப்புச் சேவை விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

பாஷை தெரியாத காரணத்தினால் நோயாளிக்கு பிழையான மருந்துகளை வழங்கிய சம்பவங்களும் உலகின் பல நாடுகளில் இடம்பெற்றுள்ளன. இதனால் நிகழ்ந்த பாரதூரமான விளைவுகள் எல்லாம் சுட்டிக்காட்டப்பட்டு எதிர்காலத்தில் இத்தகைய தவறுகள் இடம்பெறாதிருப்பதற்காக ஆஸ்திரேலிய ஆஸ்பத்திரிகளில் மொழிபெயர்ப்பு பணிமனைகளை ஆரம்பிப்பதற்கும் பூர்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. கருத்துப்பரிமாறல்களுக்கு மொழி அறிவு மிக முக்கியமாகும் என்பது இச்சம்பவத்தின் மூலம் தெளிவாகின்றதல்லவா ?

ஆமாம் ! இலங்கையின் வட பகுதியில் இடம்பெறும் இனக்கலவரத்துக்கும் முக்கிய காரணம் மொழிப்பிரச்சினை என்றால் அதனை எவரும் மறுப்பதற்கில்லை. கடந்தகால அரசுகள் தமிழ் மொழிக்கு இழைத்த அநீதிகள் தான் இன்று பூதாகரமாக மாறிவிட்டது என தமிழ் தலைவர்கள், தமிழ் அமைப்புகள் கூறி வருகின்றன.



**நிமல் சமரசுந்தர**
அரச கரும மொழி ஆணையாளர்

இந்த மொழிப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசகரும மொழி திணைக்களம் தீவிர பிரயத்தனம் எடுத்து வருகிறது. இந்நிலையில் அரசாங்க திணைக்களங்களிலும் ஏனைய அரச நிறுவனங்களிலும் தமிழ் மொழிக்கு நிகழும் இருட்டடிப்பு குறித்து நாம் எமது திங்கள் சஞ்சிகையின் சார்பில் அரசகரும மொழி ஆணையாளர் திரு. நிமல் சமரசுந்தரவைச் சந்தித்து வினவினோம். தமிழ் மொழி அமுலாக்கலில் உள்ள பிரச்சினைகள் குறித்து அரசகரும மொழி ஆணையாளருடன் நாம் நடத்திய பேட்டியை இங்கே திங்கள் வாசகர்களுக்காக தொகுத்துத் தருகிறோம்.

**கேள்வி : தமிழ்மொழி அரசகரும மொழியாக எப்போது பிரகடனப் படுத்தப்பட்டது ?**

அ.மொ.ஆ. : 1987 ஆம் ஆண்டில் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின்படி தமிழ்மொழியும் அரசகரும மொழியாக பிரகடனப் படுத்தப்பட்டது. 1987 ஆம் ஆண்டில் இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட வேளை சிங்கள மொழியைப் போல தமிழ்மொழியும் ஆங்கில மொழியும் அரசகரும மொழியாக வேண்டும் என ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. எனினும் சிங்களமும் தமிழும் அரச மொழியாகவும் ஆங்கிலம் இணை மொழியாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது.

**கேள்வி : அரச கரும மொழி என்ற வகையில் தமிழ் மொழியின் பங்களிப்பு என்ன ?**

அ.மொ.ஆ. : சிங்கள மொழியைப் போல தமிழ் மொழிக்கும் அரச அந்தஸ்து கிடைத்துள்ளது. அவ்வாறே சிங்கள மொழிக்கு உள்ள உரிமைகள் யாவும் தமிழ் மொழிக்கும் கிடைத்திருக்கிறது. ஆனால் தமிழ்மொழி அந்நிய மொழியாகவே இன்னும் இருந்து வருகிறது. அந்த நிலைமை விரைவில் மாற வேண்டும்.

**கேள்வி : அரசாங்க நிறுவனங்களில் தமிழ் மொழி அமுலாக்கலில் நிலவும் குறைபாடுகளைத் தீர்ப்பதெப்படி ?**

அ.மொ.ஆ.: தமிழ் மொழியை அமுலாக்குவது குறித்து அரசாங்க அதிகாரிகளிடையே உண்மையான ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்துவது அவசியமாகும். எனவே அரசாங்க திணைக்களங்களின் தமிழ்மொழி அமுலாக்கம் குறித்து ஊழியர்களை நாம் ஊக்குவித்து வருகிறோம். கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் மூலம் அரசாங்க அதிகாரிகளின் கவனத்துக்கு இதை நாம் கொண்டு வந்துள்ளோம். அரசாங்க நிறுவனங்களில் நிலவும் குறைபாடுகளை முற்றாக தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் நாம் பல சுற்றறிக்கைகள் மூலம் பணிப்புரை விடுத்துள்ளோம்.

எமது அரச கரும மொழி திணைக்களம் பொது நிர்வாக அமைச்சுடன்

**தொகுப்பு நூருல் அமீன்**

இணைந்து அரசாங்கத்தின் சகல மாதிரிப்படிவங்களையும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தயாரிப்பதற்கு கமிட்டி ஒன்றும் நியமிக்கப் பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டிக்கு நானே தலைமை வகிக்கிறேன். அரசாங்கத்தின் சகல மாதிரிப் படிவங்களும் இந்தக் கமிட்டியினால் மிகவும் உன்னிப்பாக பரிசீலனை செய்யப்பட்டே தயாரிக்கப்படுகின்றன. எனினும் தவறுகள் குறைபாடுகள் போன்றவற்றை ஓரிரு தினங்களில் திருத்தி அமைக்கலாம் என்று கூற முடியாது.

அரசாங்க நிறுவனங்களிலும், பிரதேச செயலகங்களிலும் தமிழ் மொழியில் கடமை புரியும் ஒரு ஊழியராவது இருக்க வேண்டும். எந்த மொழியிலாவது கடமை புரிவதில் ஏதும் தடைகள் இருப்பின் அதை போக்குவது அரசகரும மொழி திணைக்களத்தின் கடமையாகும்.

**கேள்வி : அரசாங்க நிறுவனங்களில் தமிழ் மொழியிலான ஊழியர்களை நியமிப்பதில் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி...?**

அ.மொ.ஆ.: உண்மையிலேயே அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்பதில் இன விகிதாசார முறை ஒன்றுண்டு. சிங்களம் தமிழ், முஸ்லிம் ஆகிய மூன்று இனத்தவர்களுக்கும் அரச சேவையில் அவர்களுக்குரிய விகிதாசார முறைப்படியே நியமனங்கள் கிடைக்கும். இந்த விகிதாசாரப்படி நியமனங்களை வழங்குவதற்காக அந்தந்த இனங்களுக்கிடையே தகுதியானோர் இருக்கின்றனரா என்பது குறித்து எனக்குச் சரியாகத் தெரியாது. சில பதவிகளுக்கு தகுதியானோர் இல்லாமலும் இருக்கலாம். கணக்காளர் பதவிக்கு ஆட்சேர்க்கும்போது இவ்வாறான பிரச்சினை ஒன்று தோன்றியது.

**கேள்வி : தமிழ் மொழியை அரச கரும மொழியாக்குவதில் ஏற்படும் சிக்கல்கள் என்ன ?**

அ.மொ.ஆ.: அரசாங்க அதிகாரிகளிடையே விருப்பம் குறைவாக இருந்தால் எந்த ஒரு வேலையையும் அமுல் நடத்துவது கஷ்டமான காரியமாகும். அரசாங்க அதிகாரிகள் பொறுப்புடன் தமிழ் மொழியினை கற்க வேண்டும் தட்டெழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், எழுது வினைஞர்கள் போன்றோருக்கு தமிழ்மொழி அறிவு அத்தியாவசியம். அரசாங்க ஊழியர்களுக்கு மொழி அறிவு மற்றும் குறைபாடுகளை நீக்குவது எம்மால் தனியாக செய்ய முடிந்த காரியமல்ல.

பலமொழிகள் தெரிந்த கல்விமான்கள் இல்லாதது உலகத்துக்கே பெரும் தலையிடியாகும். அந்தக்காலங்களில் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளும் போதிக்கப் பட்டன. அந்த நடைமுறை இப்போதில்லை. அதனால் நீண்டகால பாடதிட்டம் ஒன்று இதற்குத்தேவை. இது கல்வி திட்டமிடுநர்களினதும் கல்வி அமைச்சினதும் கடமையாகும். இது குறித்து நாம் கவனம் செலுத்தி வருகின்றோம். தற்சமயம் படிப்படியாக இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் மூன்று மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற அரசாங்க ஊழியர்கள் கடமையை பொறுப்பேற்கும் போது இத்தகைய சிரமங்கள் முற்றாக தீர்க்கப்படும் என நான் நம்புகிறேன்.

**கேள்வி : அரசாங்க நிறுவனங்களின் அறிவித்தல் பலகைகளில் தமிழ் எழுத்துக்கள் பிழையாக எழுதப்பட்டு வருவது தொடர்கதையாக உள்ளதே இது பற்றி... ?**

மொ.ஆ.: நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல தமிழ்மொழி புதிதாக வந்த மொழி என கருதுவதால் வந்த விளைவே இது. இந்த அறிவித்தல் பலகைகளை தயாரிக்கும் பொறுப்பு அரசாங்க அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் ஒரு செயலல்ல. எழுத்துக்களை வரையும் ஓவியர்களாலேயே இவை தயாரிக்கப் படுகின்றன. இது ஒரு பிழையான நடைமுறையாகும். அதனால் அரசாங்க திணைக்களம் ஒன்றுக்கு அறிவித்தல் பலகை ஒன்றை தயாரிப்பதில் சிரமம் இருக்குமானால் அத்தகைய அரச நிறுவனங்கள் அரசகரும மொழி திணைக்களத்தின் ஆலோசனைகளை பெறுவதே மிகவும் சரியான அணுகுமுறையாகும்.

ஆங்கில எழுத்துக்கள் பிழையானால் சிரிக்கும் ஒரு வழக்கம் எம்மிடமிருந்தது. ஆனால் சிங்களம் பிழையானால் யாரும் சிரிப்பதில்லை. அவ்வாறே தமிழ் பிழையானாலும் யாரும் சிரிப்பதில்லை. மேலும் அரச நிறுவனங்களில் அறிவித்தல் பலகைகள் தயாரிக்கப்படும் போது அவற்றை கண்டிப்பாக எமது கவனத்துக்கு கொண்டு வர வேண்டும் என்று நாம் சகல அரச நிறுவனங்களையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

**கேள்வி : அரசாங்க திணைக்களங்களுக்கு தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்கு தமிழ் மொழியில் பதிலளிக்கப்படுவதில்லையே ?**

அ.மொ.ஆ. : தமிழ் மொழியில் வரும் கடிதங்களுக்கு சட்டப்படி தமிழில் பதில் அனுப்புவதே முறையாகும். ஒருவர் தமிழிலேயே தனது

## வாகனங்களை ஏற்றி இறக்குவதன் மூலம் 72 லட்சம் ரூபா வருமானம்

மோட்டார் வாகனங்களை ஏற்றி இறக்குவதன் மூலம் கொழும்புத் துறைமுகம் கடந்த இரண்டு மாதங்களில் 72 லட்சம் ரூபாவை வருமானமாகப் பெற்றிருக்கிறது.

சுமார் 4 ஆயிரம் முதல் 6 ஆயிரம் வரையிலான வாகனங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் வாரத்தில் ஒரு தடவை அல்லது இரண்டு தடவைகள் கொழும்பு துறைமுகத்தில் தரித்துச் செல்கின்றன.

இதன்மூலமே மேற்படி 72 லட்சம் ரூபா வருமானமாக பெறப்பட்டதாக துறைமுக அதிகார சபை தெரிவிக்கிறது.

வாகனங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் இங்கு தரித்துச் செல்வதற்கான வசதிகளை மேலும் விஸ்தரிப்பதற்கும் இலங்கை துறைமுக அதிகாரசபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

கடிதத்துக்கு பதில் தரவேண்டும் என கேட்டிருந்தால் அதற்கு தமிழிலேயே பதில் அனுப்ப வேண்டும். இதுவே சாதாரண மரபாகும்.

**கேள்வி : ஆனால் அரச நிறுவனங்களில் எல்லாம் தமிழில் அனுப்பப்படும் கடிதங்களுக்கும் சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தி லேயே பதில் வருகின்றன. இதுபற்றி என்ன கூறுகிறீர்கள் ?**

அ.மொ.ஆ.: தமிழில் வரும் கடிதங்களுக்கு வேறு மொழிகளில் பதில் அனுப்புவது சட்ட விரோதமான செயலாகும். இது ஒரு கேலிக் கூத்தாகும். அத்தகைய சந்தர்ப்பங்கள் குறித்து எமக்கு தகவல் கிடைத்தால் நாம் அதற்கு தீர்வு காண்போம்.

**கேள்வி : அரசாங்க ஊழியர் களுக்கு தமிழ் - சிங்களம் - ஆங்கிலம் ஆகிய மொழியை கற்பிக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றனவா?**

அ.மொ.ஆ. : ஆம்.

**கேள்வி : இவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை அதிகரிக்கும் உத்தேசமில்லையா ?**

அ.மொ.ஆ. : தற்சமயம் எம்மால் நடத்தப்படும் பாடநெறிகளின் 27 மணித்தியாலத்தில் 90 வீதமான நேரங்களில் கலந்துகொண்டால் அவர்களுக்கு 500 ரூபா சேவைக்கால கொடுப்பனவாக வழங்குகிறோம். இது அரசாங்கத்தின் பணிப்புரையாகும். உண்மையிலேயே அரசாங்க ஊழியர் களுக்கு இந்த கொடுப்பனவு போதுமானதாக இல்லை. இந்த கொடுப்பனவு ஆயிரம் (1000/-) ரூபாவாக அதிகரித்தால் நாமும் மகிழ்ச்சி யடைவோம்.

**கேள்வி : மொழி மூலம் சமாதானம் என்பதன் அர்த்த மென்ன ?**

அ.மொ.ஆ.: இந்நாட்டில் இனக்கல வரம் தோன்றி பத்தாண்டுகளும் கடந்து விட்டன. ஆயுதங்களினால் நடத்தப்படும் யுத்தம் இன்னும் முடிவுக்கு வருவதாய் தெரியவில்லை. இதனால்தான் மொழிமூலம் சமாதானம் என்ற தொனிப்பொருளுடன் செயல்பட நாம் முன்வந்தோம். இந் நாட்டில் யாருக்கும் தமது பாஷையை (மொழியை) பற்றிய பொறுப்புணர்வு உண்டு. சிங்கள மக்கள் தமிழ் மொழியையும், தமிழ் மக்கள் சிங்கள மொழியையும் அறிந்திருக்க வேண்டும். அத்துடன் நாம் ஆங்கில மொழியையும் அறிந்திருந்தால் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும் ஒருவரை யொருவர் அறிமுகமாகவும் ஒரு பாலமாக அமையுமல்லவா ?

ஒருவரின் இதயத்தோடு நெருங்கு வதற்குரிய சுலபமான வழி கலந்துரை யாடலாகும். அதற்காக மொழி அறிவு இன்றியமையாதது. தமிழ் பிரஜை ஒருவருடன் சிங்களவர், குறிப்பாக சிங்கள அரசாங்க ஊழியர் ஒருவர் தமிழ் மொழியில் உரையாடினால், அவர்களது மொழியிலேயே குறைநிறைகளை கேட்டறிந்தால் அந்த தமிழ் பிரஜைக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவே இருக்காதல்லவா ? சிங்கள மக்களுக்கும் அப்படியே. எனவே இருசாராரும் எல்லா மொழிகளையும் கற்று இனிதே வாழ்ந்திடுவோம்.

**6ஆம் பக்கத் தொடர்ச்சி**

விவகாரங்களை பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முடிவுக்குக் விட்டிருப்பதன் நியாயமான காரணங்களை எம்மால் உணர முடிகிறது. அனைத்துக் கட்சிகளின தும் அனைத்துப் பிரிவு மக்களினதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் புதிய தீர்வுத்திட்டம் வரையப்படுவது மிகவும் பொருத்தமானதாகும். குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு அரசியல் தீர்வுத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதற்கு மிகவும் முக்கியமானது.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை சர்வசன வாக்கெடுப்பு போன்ற தடைகளை கடந்து செல்ல வேண்டிய நிலையில் உள்ள தீர்வுத்திட்ட யோசனைகளுக் கான ஆதரவைப் பெறுவதில் அரசு சாமர்த்தியத்துடனும் உறுதியுடனும் செயலாற்றும் என நம்புகிறோம். அரசின் சமாதான முயற்சிகளுக்கு இயன்றளவு ஒத்துழைப்பு வழங்க நாமும் தயாராக உள்ளோம்.

**10ஆம் பக்கத் தொடர்ச்சி**

**காணி**

நாம் பல ஆண்டுகளாக சிங்கள மக்களின் திட்டமிட்ட குடியேற்றங்களால் எமது காணிகள் பறிபோனதை வன்மையாக கண்டித்து வந்துள்ளோம். இந்தப் புதிய யோசனைகளில் அரச காணிகள் சகலதும் பிராந்திய சபைகளுக்கு கொடுக்கப்படுகிறது. காணிப்பங்கீட்டு அதிகாரம் பிராந்திய சபையிடமே இருக்கும். யாருக்குப் பங்கிட வேண்டும் எவ்வாறு பங்கிட வேண்டும் என்பதை எல்லாம் தீர்மானிக்கும் பொறுப்பு பிராந்திய சபைக்கும், முதலமைச்சரிடமும் கொடுக்கப்படுகிறது.

இப்படியாக பல முன்னேற்றகரமான விடயங்கள் தமிழ் மக்கள் நீண்ட காலமாக கேட்டுவந்த விடயங்கள் இந்த ஆலோசனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில விடயங்களை கவனிக்க வேண்டி இருந்தாலும் கூட இப்படியானதொரு திருப்திகரமான திட்டம் வேறு எந்த அரசுகளினாலும் அல்லது அரசியல் தலைமைகளினாலும் முன்வைக்கப்படவில்லை.


எனவே இந்த அடிப்படையில் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு ஏகோபித்து இந்த தீர்வுத்திட்ட யோசனையை முழுமையாக ஆதரிக்க வேண்டும் என்பது தான் எனது பணிவான வேண்டுகோளாகும்.

## அனுமதிப்பத்திரமற்ற 50 ஆயிரம் மருந்து சாலைகள்

நாடு முழுவதிலும் அனுமதிப்பத்திர மற்ற சுமார் 50 ஆயிரத்துக்கும் அதிகமான மருந்துச்சாலைகள் இயங்குவதாக தெரியவந்துள்ளது.

இந்த மருந்துசாலைகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் முகமாக சுகாதார அமைச்சு மூவரைக் கொண்ட கமிட்டி ஒன்றை நியமித் திருக்கிறது.

தற்சமயம் நாடு முழுவதிலும் இயங்கும் பெரும்பாலான மருந்த கங்கள் அனுமதிப்பத்திரங்களின்றி இயங்குவதுடன், மருந்துகளைப்பற்றி எவ்வித பயிற்சியும் பெறாதவர் களாலேயே இவை நடத்தப்படுவ தாகவும் தெரியவந்துள்ளது.



அமைச்சர் பெர்னாட் சொய்சா, திரு பீட்டர் கெனமன் ஆகியோருடன் இலங்கை சமசமாஜக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா கம்யுனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகள்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகள் அமைச்சர் தொண்டமான் தலைமையில்

# திங்கள் சஞ்சிகையின் சந்தாதாரராகுங்கள்

அன்புடையீர்,

அரசாங்க தகவல் திணைக்களத்தினால் மாதாந்தம் வெளியிடப்படும் "திங்கள்" சஞ்சிகைக்கு நீங்களும் சந்தாதாரராகுவதன் மூலம் "திங்கள்" உங்கள் வீடு தேடி வரும்.

| | |
|---|---|
| ஒரு வருட சந்தா | 48 ரூபா |
| ஆறுமாத சந்தா | 27 ரூபா |

உங்கள் சந்தாப் பணத்தை கீழ் வரும் படிவத்தையோ அல்லது பிரதி செய்த படிவத்தையோ பூர்த்தி செய்து 'Director Information' என்ற பெயரில் காசுக்கட்டளையாகவோ அல்லது தபால் கட்டளையாகவோ திங்கள் சந்தா, பணிப்பாளர், அரசாங்க தகவல் திணைக்களம், "லக்ஷ்மன் பணிமனை" 321, காலி வீதி, கொழும்பு - 03 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

---

## சந்தா படிவம்

பணிப்பாளர்,
அரசாங்க தகவல் திணைக்களம்
கொழும்பு - 03

திகதி .........................

அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் திங்கள் சஞ்சிகையின் சந்தாதாரராக என்னையும் சேர்த்துக்கொள்ளுங்கள். ஒரு வருட / ஆறு மாத சந்தாப் பணத்தை இத்தோடு காசோலையக / தபால் கட்டளையாக அனுப்பி வைக்கிறேன்.

பெயர் : ............................................................

முகவரி : ............................................................

....................................
கையொப்பம்



பத்திரிகையாளர்களும்
தொழிலாளர்களே !
ஆனால்,
அவர்கள் ஜனநாயகத்தின் காவலர்கள்
எனவே,
அவர்களது பிரச்சினைகளுக்கு
குரல் கொடுக்க
நான்
என்றென்றும் தயாராகி உள்ளேன்
ஆகவே,
பத்திரிகையாளர்கள்
உண்மை நீதி நேர்மை
என்பவற்றை கடைப்பிடிக்க
பின்நிற்கக் கூடாது.

அலவி மௌலானா

பொள்ளாச்சி நசன்
அ.கு.எண் : 642 006.
Web : http//:www.thamizham.net